விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 11 திங்கட்கிழமை (26.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 343

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசுக்கு எதிராக மாறிவரும் மாகாண சபை தீர்மானங்கள்

## 13ஆவது திருத்த ஒழிப்பு யோசனைக்கு போர்க்கொடி

(கொழும்பு), அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தை ஒழிப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ள நிலையில் அதற்கு எதிராக மாகாண சபைகள் போர்க்கொடி உயர்த்தவுள்ளன.

தற்போது செயற்படும் எட்டு மாகாண சபைகளும் ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற போதிலும், 13-வது திருத்தத்தை ஒழிப்பதற்கு எதிராக இவற்றில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷில் தீ விபத்து; 120 பேர் பலி



பங்களாதேஷ் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 120 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவுக்கு புறநகரில் உள்ள அல்ஹறிலியா மாவட்டத்தில் அமைந்துள்ள பல மாடிகளைக் கொண்ட ஆடைத் (20ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்த்து விளம்பரத்திற்கு 75 கோடி ரூபாய் செலவு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவியேற்பு தினத்திற்கு வாழ்த்து தெரிவித்து சுமார் 75 கோடி ரூபாய் செலவில் பத்திரிகை விளம்பரங்கள் கொடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது ஜனாதிபதி மனதால் கூட எதிர்பார்க்காத நிலைமையாக இருக்கக்கூடும். எனினும் இந்த விளம்பரங்களுக்கு செலவிடப்பட்ட பணத்தை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தியிருக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். (எ-11)

## கிழக்கில் பொது நிகழ்வுகளுக்கு தடை!

கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 28-ம் திகதி வரையில் நடைபெறவுள்ள பொது நிகழ்வுகளுக்கு படையினர் தடைவிதித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

படையினரின் இவ்வாறான செயலானது பொது மக்களின் இயல்பு வாழ்க்கையை பெரிதும் குழப்பும் வகையில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று காலை ஏற்பாடு செய்யப்பட்ட பொது நிகழ்வுகளை நிறுத்துமாறு குறித்த பகுதிகளில் உள்ள நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை படையினர் அச்சுறுத்தியது தொடர்பில் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவீரர் தினத்தை கருத்தில் கொண்டே இலங்கை படையினர் இவ்வாறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவ்வாறான (20ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கான புதிய காய்நகர்த்தலில் கூட்டமைப்பு

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகளை முன்வைக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசியல் தந்திரோபாயங்களை கையாள உள்ளதாகவும் இதன் அடிப்படையில் இந்தியா, அமெரிக்கா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் ஓர் கட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் ஜனவரி மாதத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மூத்த தலைவர் ஒருவர் விபரிப்பு

தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காணுமாறு இலங்கையை வலியுறுத்தக்கூடிய அன்றேல் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடிய நாடுகளின் உதவியை பெற்றுக் கொள்வதே கூட்டமைப்பின் பிரதான நோக்கம் என்றும் அவர் கூறினார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலம்பெயர் தமிழர்கள், சர்வதேச தமிழ் மக்கள்சார் அமைப்புகள் என்பவற்றுடன் விரிவான பேச்சுக்களை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் அண்மையில் பேர்லினில் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பல்வேறு தரப்புடன் பேச்சுகளை முன்னெடுத்தனர் என்று கூறிய அவர், இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் இழுத்தடிக்கும் போக்குகளைக் கையாண்டால் சர்வதேச ரீதியில் தமிழ் அமைப்புகளை ஒன்றிணைத்து சாத்வீக போராட்டம் ஒன்று மேற் (20ஆம் பக்கம் பார்க்க)

## நாளை முதல்....

உங்கள் வலம்புரியில்
கொழும்பு பிரபல
ஆசிரியர்களினால்
தயாரிக்கப்பட்ட
க.பொ.த.(சா/த) பாட
வினாத்தாள் வெளிவருகிறது.

# அசாதாரண காலநிலையால் நாட்டில் 8 பேர் பலியாகினர்

(அம்பாந்தோட்டை)

நாட்டில் சில மாவட்டங்களில் தொடரும் அசாதாரண காலநிலை காரணமாக இது வரையில் 8 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்னல் தாக்கங்கள், மண்திட்டுகள் சரிந்து வீழ்ந்தமையாலேயே இம் மரணங்கள் இடம் பெற்றுள்ளன.

இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, காலி, தம்புள்ள போன்ற இடங்களிலேயே இந்த மரண ங்கள் சம்பவித்துள்ளன.

காலி மற்றும் மாத்தறை பிரதேசங்களில் கடும் மழை காரணமாக அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை, நுவரெலியா போன்ற பிரதேசங்களும் பாதிப்புக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அம்பாறையின் சில கிராமங்களில் நேற்றைய தினம் நிலஅதிர்வு உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடிகானல, தெய்வானகிந்த, கியூலேகம மற்றும் பொல்கெங்கார போன்ற இடங்களிலேயே இவ்வாறான சிறிய அளவிலான நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன. (எ-11)

# பிரதம நீதியரசர் ஷிராணிக்கு எதிரான பிரேரணைக்கு ஆயர்கள் கண்டனம்



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து நீக்கும் ஆளும் கட்சியின் முயற்சிக் குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மன்றம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள கத்தோலிக்க ஆயர்கள் பேரவை மன்றத்தால் வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றவியல் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான விளக்கங்கள் தெளிவாக இல்லை. நிர்வாகம், சட்டத்துறை, நீதித்துறை ஆகிய மூன்றும் தனித்தனியாக இயங்க வேண்டியவை. (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பெரஹர நிகழ்வில் புத்த பெருமானுடன் ஐம்பெரும் தெய்வங்கள் வீதியுலா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாகவிகாரையில் மூன்றாவது ஆண்டாக நடைபெறும் ஸ்ரீகட்டின பிங்கும பெரஹர நிகழ்வில் புத்த பெருமானுடைய திருச்சொரூபம், பிள்ளையார், சிவன், முருகன், விஷ்ணு மற்றும் முத்தேவியர்கள் ஒன்றிணைந்த ஒரு சொரூபம் என்பன ஊர்வலமாக எடுத்து வரப்படவுள்ளது.



நாயக்க வணபிதா மற்றும் யாழ்.நாக விகாரை வணபிதாவின் அனுசரணையுடன் தமிழ் பௌத்த சங்கம் மற்றும் நந்தாராம தமிழ் பௌத்த அறநெறிப்பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் மாணவர்களும் யாழ். மாவட்ட இராணுவத்தினருடன் இணைந்து இந்த நிகழ்வை நடத்துகின்றனர்.

இந்த நிகழ்வு இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். வீதியுலா இரவு 9 மணிவரை நடைபெறுவதுடன் தொடர்ந்து நாளை மதியம் 2 மணிவரை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதுடன் இறுதியில் மதிய போசனமும் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத குருக்கள் மற்றும் மாணவர்கள், இராணுவத்தினர் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-11)

# மின்சார வேலியில் சிக்கி சிறுமி பலி

(மாத்தறை)

பயிர்கள் சேதமாக்கப்படுவதை தடுப்பதற்காக காட்டுப் பன்றிகளுக்கு வைக்கப்பட்ட சட்டவிரோதமான மின்சார வேலியில் சிக்குண்டு 12 வயதான சிறுமியொருவர் பலியாகியுள்ளார்.

மாத்தறை யட்டியான எனும் இடத்திலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சிறுமி ஆடைகளை கழுவுவதற்காக வயல் வெளிக்கு அருகில் உள்ள கிணற்றடிக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சென்றுள்ளார்.

இவர் ஆடைகளை கழுவிவிட்டு வயல் வெளியில் விழுந்து கிடந்த தேங்காய்களை எடுப்பதற்காக சென்றுள்ளார். இதன்போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

யட்டியான மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இந்த மாணவியின் தந்தை மேசன் தொழிலாளி என்பதுடன் தாயார் புற்றுநோயாளி எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுப் பன்றிகளை தடுப்பதற்காக இந்த சட்டவிரோத மின்சார வேலி அமைக்கப்பட்டிருந்ததாகவும் அந்த மின்சார வேலியை அமைத்த சந்தேக நபர் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-1)

# ஆதரவாளர்கள் மீது அச்சுறுத்தல் அரியநேத்திரன் எம்.பி. கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் உள்ள தனது ஆதரவாளர்களை புலனாய்வுத் துறையினர் அச்சுறுத்தி வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொக்கட்டிச்சோலைப் பகுதியில் உள்ள எனது ஆதரவாளர்களின் வீடுகளுக்குச் சென்ற புலனாய்வுத்துறையினர் எனக்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் இளைஞர்களை மிரட்டியுள்ளனர்.

மாவீரர் தினத்தையிட்டு நிகழ்வுகளை செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தயாராகி வருவதாகவும் அதற்கு உதவினால் உங்களைக் கைது செய்து நான்காம் மாடிக்கு அனுப்புவோம் என்று மிரட்டி வருகின்றனர்.

மாவீரர் தினத்தில் துண்டுப்பிரசுரம் விநியோகித்தல் மற்றும் நிகழ்வுகளை அவர் ஏற்பாடு செய்திருப்பதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டால் உங்களைத்தான் கைது செய்வோம் என்றும் இளைஞர்களை மிரட்டியுள்ளனர்.

புலனாய்வுத்துறையினரின் இவ்வாறான செயற்பாடுகளை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர்களை மிரட்டுவது நாடாளுமன்ற உறுப்பினராகிய எனக்கு அச்சுறுத்தல் விடுவதாகவே கருத வேண்டியுள்ளது.

மக்கள் மறந்து வரும் விடயங்களை படையினர் ஞாபகமூட்டி மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றார். (எ-11)

# சிறுவர்கள் மீதான வன்முறைகளால் 9 மாதங்களில் 9 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகளினால் கடந்த ஒன்பது மாதங்களில் 9 ஆயிரத்து 414 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 ஆயிரத்து 414 பேர் சிறுவர்களாவர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பு ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பெண்கள், சிறுவர்களின் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டே ஒரு நாட்டின் அபிவிருத்தி மதிப்பிடப்படுகின்றது. பல நாடுகளில் வறுமை 0.1 வீதமே இருக்கின்றது. இங்கு 99.9 வீதம் வறுமை இருக்கின்றது. ஏனைய 0.1 வீதமானவர்களே போசாக்குடன் வாழ்கின்றனர். அவ்வாறானவர்கள் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும்.

ஜனவரி மாதம் முதல் செப்ரம்பர் மாதம் வரையிலான 9 மாத காலப் பகுதியில் பெண்கள் சிறுவர்கள் 9 ஆயிரத்து 414 பேர் துன்புறுத்தப்பட்டுள்ளனர். பெண்கள் மற்றும் சிறுவர்களை பாதுகாப்பதற்கு 2013ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒன்றுமே இல்லை.

இத் திட்டத்தில் பெண்கள் தொடர்பான அமைச்சுக்கு 0.08 வீதமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார். (எ-11)

# நாடாளுமன்றில் கொஹில கிழங்குக் கறியில் சயனைட் கலந்திருந்தமை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கொஹில கிழங்குக் கறியில் சயனைட் நஞ்சு பொருள் கலந்திருந்தமை அரச இரசாயன பகுப்பாய்வாளரின் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 16ஆம் திகதி நாடாளுமன்ற உணவகத்தில் சமைக்கப்பட்ட கொஹில கிழங்கு, பருப்பு சேர்க்கப்பட்ட உணவு வழங்கப்பட்டன. அதில் கொஹில கிழங்குகக் கறி வழமைக்கு மாறாக சிவப்பு நிறத்திலிருந்தமை பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதையடுத்து சமைக்கப்பட்ட மற்றும் சமைக்கப்படாத மரக்கறிகள் அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க சபாநாயகரால் உத்தரவிடப்பட்டது.

இவ்வாறு பகுப்பாய்வு செய்து திணைக்களத்தினால் நாடாளுமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் கொஹில கிழங்குக் கறியில் சயனைட் நஞ்சு கலந்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்றப் பொலிஸார் பலரிடம் வாக்கு மூலங்களைப் பெற்று விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (எ-11)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பிரம்ம குமாரிகளின் ஏற்பாட்டில் நடைபெறும் தொடர்பாடல் திறன் எனும் தலைப்பிலான மாதாந்த சொற்பொழிவு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம், இல.211, பிறவுண் வீதியிலமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சொற்பொழிவினை வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனப் பணிப்பாளர் சி.கிருஷ்ணானந்தன் ஆற்றவுள்ளார். (எ-9)

# விளையாட்டு வினையானது

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மனைவியினை அச்சுறுத்துவதற்காக பொய்யாக நஞ்சருந்த முற்பட்டவர் நஞ்சினை உட்கொண்டதால் அவர் உயிரிழந்த விபரீத சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு தாவளை இயற்றாளை வரணிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தினைச் சேர்ந்தவரும் ஒரு பிள்ளையின் தந்தையாருமான வேலுப்பிள்ளை சின்னத்தம்பி (வயது 58) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் சம்பவ தினமன்று மது போதையில் வந்து தனது மனைவியிடம் கிருமி நாசினியொன்றினை எடுத்துக்காட்டி அதனைக் குடித்து இறக்கப் போவதாக அச்சுறுத்த முற்பட்டுள்ளார்.

எனினும் தவறுதலாக மருந்து உட்சென்று விடவே உயிருக்குப் போராடிய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிர் இழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு இறப்பு தொடர்பான விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி முருகேசு சந்திரகுமார் மேற்கொண்டிருந்தார். (எ-4,6)

# தொங்கிய நிலையில் பெண்ணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

தூக்கில் தொங்கிய நிலையில் இளம் பெண்ணொருவரின் சடலம் கொக்குவில் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதில் நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கினைச் சேர்ந்த ரமேஸ்குமார் விதுஷா (வயது 17) என்பவரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் 2.00 மணியளவில் இடம்பெற்ற போதிலும் சடலம் நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவிலேயே மீட்கப்பட்டுள்ளது. குறித்த இறப்புத் தொடர்பில் மரண விசாரணையினை மு.உதயசிறி மேற்கொண்டார். (எ-4,6)

# பிரசங்க பூசணம் இறையடி சேர்ந்தார்

(யாழ்ப்பாணம்)

தொல்புரத்தைச் சேர்ந்த பிரசங்க பூசணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி நேற்று இறையடி சேர்ந்தார்.

சைவ சமய பிரசாரங்களில் ஈடுபட்டு வந்த இவர் இந்து சமய முதன்மையாசிரியா என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இறுதிக் கிரியைகள் நேற்று மாலை நடைபெற்றன. (எ)

ஆசிரியர் முத்துலிங்கத்தின்
EASY ENGLISH
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்
(936)

செல்லா சினிமா யாழ்ப்பாணம்


விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்
10.30, 2.30, 6.30, 9.30

Cambridge Management College

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு French, Doutch, ஆகிய மொழிகளில் இலகுவாகப் பேச, எழுத, வாசிக்க, கற்பிக்கப் படுகின்றன.

மற்றும் IELTS, English, IT, Sinhala கற்க விரும்புவர்களுக்கான பிரதியேக வகுப்புகளும் நடைபெறுகின்றன.

6-13 வயது வரையான சிறுவர் சிறுமியர்களுக்கு ICT, English வகுப்புகளும் நடைபெறுகின்றன.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com

தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும், உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.No:-0212225392
(சி-1538)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நமக்குள்ளே ஒரு புதையல்

ஒரு பெரிய சந்தை. அங்கே பொருட்களைக் கொள் வனவு செய்வதற்காக பலபேர் வந்து போவதுண்டு.

அங்கே ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுத்தபடி நின்று கொண்டிருந்தான். நீண்ட காலமாக அவன் அந்த ஒரே இடத்தில் நின்று கொண்டு பிச்சையெடுப்பது அவனது வாடிக்கையாக இருந்தது.

என்றாலும் அவன் வாயைத் திறந்து, "எனக்குப் பிச்சை போடுங்கள்" என்று யாரையும் கேட்டதில்லை- தனது வலது கையை மட்டும் முன்னால் நீட்டி ஏந்திக் கொண்டிருப்பான். அவன் வாயைத் திறந்து எதுவும் பேசுவதில்லை.

அந்த வழியால் வருபவர்களும் போகிறவர்களும் தங்களால் இயன்ற பணத்தை அவன் கையில் போட்டு விட்டு போய் விடுவார்கள்.

ஐம்பது வருட காலமாக அவன் பிச்சையெடுக்கும் பணியைச் செய்து கொண்டிருந்தான்.

திடீரென ஒருநாள் அவன் அந்த இடத்திலேயே விழுந்து இறந்து போனான்.

"ஐயோ பாவம்! இப்படி அநாதையாக விழுந்து இறந்து போய் விட்டானே!" என்று பரிதாபப்பட்டார்கள் அந்த ஊர் மக்கள். அவன் மீது மிகவும் அனுதாபம் கொண்டிருந்தார்கள்.

இவன் பிச்சையெடுத்தாலும் யாரையும் தொந்தரவு செய்வதில்லை.

ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி, "இந்தப் பிச்சைக்காரனுக்கு இதே இடத்தில் ஒரு சிலை வைக்க வேண்டும்" என்று தீர்மானம் மேற்கொண்டார்கள்.

உடனே ஒவ்வொருவரிடமும் சென்று நிதி வசூலிக்க ஆரம்பித்தார்கள். பல பேர் மனமுவந்து தாராளமாக நிதி கொடுத்தார்கள். இப்படியாக நிறையப்பணம் சேர்ந்தது.

அந்த நபர் நின்று கொண்டிருந்த இடத்திலேயே அஸ்திவாரம் தோண்ட ஊர் மக்கள் ஆரம்பித்தார்கள். திடீரென ஒரு விசித்திரமான சத்தம், "டங், டங்" என்று கேட்டது.

அவசர அவசரமாகத் தோண்டிப் பார்த்தார்கள். ஒரு பெரிய செப்புக்குடம் தெரிந்தது. அதை வெளியே எடுத்து பார்த்தார்கள். அந்தச் செப்புக்குடத்தினுள் ஏராள மான தங்க நாணயங்கள் இருந்தன. அதைப் பார்த்த கூட்டத்தில் இருந்தவர்களுக்கு மிகவும் ஆச்சரியம்.

அப்போது அவ்வழியாக ஒரு துறவி வந்தார். அவர் அங்கு கூடி நின்ற கூட்டத்தினரைப் பார்த்து; "ஒவ்வொரு மனிதனும் இப்படித்தான் செய்து கொண்டிருக் கிறான்; தன் மனதில் குவிந்திருக்கும் திறமைகள், மகிழ்ச்சி, தெய்வத்தன்மை ஆகியவற்றை அவன் புரிந்து கொள்வதில்லை. அது வெளியே எங்கேயோ இருப்பதாக நினைத்துக் கொண்டு அதைத் தேடி காலம் முழுவதும் அலைந்து திரிகிறான்" இவ்வாறு கூறி விட்டு அந்தத் துறவி அங்கிருந்து விலகினார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் அதன் பின்புதான் சிந் திக்க ஆரம்பித்தார்கள். நம்மிடம் என்னென்ன இருக் கிறது என்பதை நாம் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். ஆனால், அதையெல்லாம் தேடி வெளியே அலைந்து கொண்டிருக்கிறோம் என்பதே இந்தக் கதையின் கருத்தாகும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# உரிய வருமான வரி விபரத்திரட்டை 30 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்

## யாழ்.உள்நாட்டு இறைவரித்திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வருமான வரி செலுத்துவோர் வரி மதிப்பாண்டான 2011/ 2012 ஆம் ஆண்டுக்கான வருமான வரி விபரத்திரட்டுக்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரிய வரிக் கொடுப்பனவுக்கான பணம் செலுத் தும் படிவத்துடன் உள்நாட்டு இறை வரித்திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென உள்நாட்டு இறை வரித் திணைக்கள யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி அறி வித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 106 (1) ஆம் பிரிவின் கீழ் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வரிமதிப்பாண்டு 2011/ 2012 வருமான வரித்திரட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இறைவரித்திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தில் வருமான வரிக் கோவைகளை வைத்திருப் போர் யாழ்.பிராந்திய அலுவலகத் தில் சமர்ப்பிக்க வேண்டும். இச்சட் டத்தின் படி வரிமதிப்பாண்டுக்கான வரிக் கொடுப்பனவுகளை கடந்த செப் டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்று வருமான வரி செலுத்துவோருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந் தது.

எவ்வாறாயினும் இதுவரை வரி யைச் செலுத்தாதவர்கள் அதனை உரிய முறையில் இலங்கை வங்கி யில் செலுத்தி வரி விபரத்திரட்டுடன் சமர்ப்பிக்க வேண்டும். இந்தச் சட்ட த்தின் படி வியாபார அல்லது வர்த் தக இலாபங்கள் மற்றும் வருமா னங்களை வெளிப்படுத்துவோர் வரி விபரத்திரட்டுடன் தமது நிதி யாண்டுக்கான இறுதிக் கணக்குக் கூற்றையும் இணைக்க வேண்டும். இது தொடர்பில் பிரச்சினைகள் ஏதும் இருக்குமாயின் பிரதி ஆணை யாளருடன் கலந்தாலோ சிக்கலாம்.

மேற்படி வரிமதிப்பா ண்டுக்கான வருமான வரி க்கு பொறுப்புடையவர்க ளாக இருந்தும் இதுவரை வரிக் கோவைகளை வைத் திருக்காதவர்களும் தாமாக முன்வந்து வரிக்கோவை களைத் திறக்கலாம். இவ் வாறு திறந்து உரிய வரிக ளைச் செலுத்த வரி விபரத் திரட்டுக்களை குறித்த திகதி க்கு முன்னர் சமர்ப்பிப்ப தற்குரிய விசேட ஏற்பாடு களும் செய்யப்பட்டுள்ளன. புதிய வரி செலுத்துவோ ரின் கடந்த கால வருமான விபரங்கள் பற்றி எதுவும் கோரப்படமாட்டாது.

வரியைச் செலுத்தா மல் அன்றி வரி விபரத் திரட்டை சமர்ப்பிக்காமலோ தட்டிக் கழிக்கப்படும் இட த்து தண்டப்பணம் அற விடுவதற்கான ஏற்பாடுக ளுக்கும் உள்நாட்டு இறை வரிச் சட்டத்தில் இடமுண்டு. யாழ்.பிராந்திய அலுவல கம் அமைந்துள்ள வீரசிங் கம் மண்டபத்தின் கீழ் மாடித் தளத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8 மணி முதல் 5 மணிவரை வருவ மான வரி விபரத்திரட்டுக் களை பெற்றுக் கொள்வதற் கான விசேட கரும பீடமொ ன்றை அமைப்பதற்கான ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன. எனவே, உரிய வேளையில் வரிக் கொடுப்பன வுடன் வரி விபரத்திட்டையும் சமர்ப்பி த்து தண்டப்பணம் செலுத்துவதிலிரு ந்து தவிர்த்துக் கொள்ளுமாறு பிரதி ஆணையாளர் கேட்டுள்ளார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 110 |
| உருளைக்கிழங்கு | 90-110 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 250 | 150 | 200 |
| தக்காளி | 100 | 70 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 120 | 110 | 160 |
| பூசணி | 60 | 50 | 60 |
| புடோல் | 70 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 160 | 130 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | 50 | 70 |
| பயற்றங்காய் | 70 | 60 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 120 |
| பீற்றூட் | 160 | 40 | 140 |
| கறிமிளகாய் | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 280 | 80 | -- |
| போஞ்சி | 200 | 80 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 180 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 38 | 30-35 |

# இராசி பலன்

*26.11.2012*
*(கார்த்திகை 11, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு*
*திரயோதசி பிற்பகல் 4.30 மணிவரை*
*அச்சுவினி முற்பகல் 10.40 மணிவரை*
*இராகுகாலம் 7.43-9.13 மணிவரை*
*சுபநேரம் 12.13-1.43 மணிவரை*
*இரண்டாவது கார்த்திகைத் திங்கள்,*
*திருவண்ணாமலை தேர்.*

**மேடம்**

குடும்பத்தினர் உங்களின் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது கார ணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோ க்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர் கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம்.

**இடபம்**

சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பிரி யமான சிலருக்காக செலவு செய்யும் சூழ் நிலை ஏற்படலாம், பொறுப்பாக வேலை களைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம்.

**மிதுனம்**

விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், காலை நேரத்திலேயே மகிழ்வான செய்திகள் வந்து சேர லாம், பெரிய மனிதர்களின் தொட ர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலமான நாள்.

**கடகம்**

நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புக ழும் அதிகரிக்கும், தலைமைப் பொறு ப்புக்கள் கைகூடும் நிலையுண்டு, உற் சாகத்துடன் பணி புரிவீர்கள், பயணங் களால் ஆதாயமுண்டு, கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிங்கம்**

சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், சாமர் த்தியமான பேச்சுக்களால் காரியம் சாதி ப்பீர்கள், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும்.

**கன்னி**

உத்தியோகத்தில் மேலதிகாரிகளை விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது, அலைச்சல்கள் அதிகரிக்கும், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம்.

**துலாம்**

உறவினர் வருகையால் உற்சாகம் பெரு கும் நாள், பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**விருச்சிகம்**

பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவர், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடை க்கலாம், அரைகுறையாக இருந்த பணி களை மீதியும் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகும்.

**தனுசு**

எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், மாமன், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லை கள் ஏற்படலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்**

உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோச னைகளைச் சொல்ல முன்வரலாம், பொரு ளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்**

சிறப்பான நாள், உடன் பிறப்புக்களின் குணத்தை அறிந்து நடந்து கொள்வீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதி கரிக்கும், பக்குவமாகப் பேசி காரிய ங்களை சாதித்துக் கொள்வீர்கள், பய ணங்களால் பலனுண்டு.

**மீனம்**

பொதுநல ஈடுபாட்டில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்திற்குத் தேவை யான பொருட்களை வாங்கி மகிழ்வீர் கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், திருமணப் பேச்சுக்கள் முன்னேற்றம் காண்பீர்கள்.

**வள்ளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொழில்முயற்சிகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்

## மத்திய வங்கியால் வெளியீடு

இலங்கை மத்திய வங்கி 'இலங்கையில் தொழிற்முயற்சிகளை மேற்கொள்வதற்கான படிப்படியான வழிகாட்டல்' என்ற நூலின் மூன்றாவது பதிப்பினை வெளியிட்டிருக்கிறது.

இந்நூலானது இலங்கையில் தொழிற்முயற்சிகளை ஆரம்பித்து தொழிற்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகள் பற்றிய அனைத்து தொடர்பான தகவல்களையும் உள்ளடக்கியுள்ளது.

2012 ஒக்ரோபர் வரை தொடர்பான நிறுவனங்களினால் முன்மொழியப்பட்ட அவசியமான திருத்தங்கள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள்: தொழிலினைப் பதிவு செய்தல், முதலீட்டுச் சபையின் ஒப்புதலைப் பெறுதல், பூர்வாங்க திட்டமிடல் தீர்ப்பனவு/ அபிவிருத்தி அனுமதி/ இணக்கச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுதல், சொத்துக்களைப் பதிவு செய்தல், தொலைபேசியைப் பெற்றுக் கொள்ளுதல், மின்வலு மற்றும் நீர்வழங்கல் இணைப்புகள், ஊ.சே. நிதியம் மற்றும் ஊ.ந. நிதியத்தினை செலுத்துதல், வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வரிகளைச் செலுத்துதல், ஊர்திகளைப் பதிவு செய்தல், பொதுமக்களுக்கு பங்குகளை வழங்குதல், வங்கிக் கணக்களை திறத்தல் மற்றும் கடன்களைப் பேணுதல், ஏற்றுமதி, இறக்குமதிகளை மேற்கொள்ளுதல் மற்றும் வெப் தளத்தினை பதிவு செய்தல் மற்றும் ஆண்டுக் கூற்றுக்களைப் கோவைப்படுத்தல் போன்ற முக்கிய தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்பான 28 முக்கிய துறைகளின் கீழ் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

மேலும் இது கடவுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளுதல், இலங்கைக்கான விசாக்களைப் பெற்றுக் கொள்ளுதல், இலங்கைப் பிரஜைகள் அல்லாதோரால் காணிகள் கொள்வனவு செய்யப்படுதல், கைத்தொழில் மாசடைதலைக் கட்டுப்படுத்தல், புதிய செயற்றிட்டங்களுக்கான ஒப்புதல், பொலிஸைத் தொடர்பு கொள்ளுதல், ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்தல் மற்றும் அலுவலர்களுக்கு இழப்பீடுகளை செலுத்தல் போன்ற ஈடுபாடு மிக்க பொதுவான விடயங்களின் தகவல்களையும் தருகின்றது.

தேவைப்படும் இடத்து மேலும் தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்துநர்களுக்கு உதவும் பொருட்டு தேவையான விடத்து இணையத்தள முகவரிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நூலானது, தொழில் புரியும் சமூகத்தினருக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் பயன்மிக்க மூல ஆவணமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இவற்றைத் தேடும் செலவுகளையும் நேரம் மற்றும் அத்தகைய தகவல்களை பெற்றுக் கொள்வதிலுள்ள வசதியீனங்களையும் குறைப்பதன் மூலம் உதவும்.

இந்நூலின் பிரதி ஒன்றின் விலை ரூ.500 ஆக இருப்பதுடன் இவ்வெளியீட்டினை 58, சிறிஜெயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரியவில் உள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தில் உள்ள இலங்கை மத்திய வங்கியின் விற்பனை மற்றும் விநியோகப் பீடத்தில் கொள்வனவு செய்துகொள்ள முடியும்.

அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளமான www.cbsl.gov.lk வில் இருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

# றெலிகொம் றெயின்போ பேஜஸின் புதிய மொபைல் பயன்பாட்டு நிரலி




SLT றெயின்போ பேஜஸ் அண்மையில், அதன் வாடிக்கையாளர்கள் தாம் செல்லுமிடத்திலெல்லாம், இலகுவாக அணுக்கத்தை பெறும் வகையிலான வசதியை அளிக்கும் தனித்துவமிக்க அன்ட்றொயிட் தொலைபேசிகளுக்கான றெயின்போ பேஜஸ் மொபைல் ஆப்(Mobile App') இனை அறிமுகம் செய்தது.

மொபைல் தொலைபேசியானது, பாவனையாளர்கள் மத்தியில் ஓர் உயிர் நாடிபோல செயற்படுகின்றது.

இதனை நன்கறிந்துள்ள SLT றெயின்போ பேஜஸ் சம நேரத்தில் விபரக்கொத்து தகவல்களை வழங்குவதுடன் SLT றெயின்போ பேஜஸ் இனை அனைத்து வயதினர் மத்தியில் எடுத்துச் சென்று அதிகரித்த பாவனையை ஏற்படுத்துவதற்கு ஊக்கியாக அமையும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி குறித்த இந்த மொபைல் பயன்பாட்டு நிரலியை உருவாக்கியுள்ளது.

SLT றெயின்போ பேஜஸ் எனப் பரவலாக அறியப்படும் SLT பப்பிளிக்கேசன்ஸ் (பிரைவட்) லிமிட்டட், இலங்கையின் முழுமையான தேசிய விபரக் கொத்தான SLT றெயின்போ பேஜஸ் இனை பிரசுரிப்பதுடன் இலங்கையின் முதன்மை விபரக் கொத்து வெளியீட்டாளர் என்ற தனித்துவம் மிக்க இடத்தினையும் பிடித்துள்ளது.

1930ஆம் ஆண்டுமுதல் விபரக் கொத்தினை வெளியிட்ட நிறுவனம் என்ற வரலாற்றினை SLT கொண்டுள்ளது.

SLT அதன் சொந்த விபரக் கொத்துப் பிரிவினை 2002ஆம் ஆண்டு ஆரம்பித்தது.

குறித்த இந்த றெயின்போ பேஜஸ் என அனைவராலும் அறியப்படும் SLT பப்பிளிக்கேசன்ஸ் (பிரைவட்) லிமிட்டட், சிறிலங்கா றெலிகொம்மின் முழுமையான உரித்துடைய துணை நிறுவனமாகும்.

SLT றெயின்போ பேஜஸ் இந்த வருடம் தனது தசாப்த பூர்த்தியினை மிகுந்த பெருமையுடன் கொண்டாடியது.

இலங்கையில் உள்ள எந்தவொரு வர்த்தகம், சேவைகள், அல்லது பொருட்கள் வழங்குநர் குறித்து அறிய விரும்பும் ஒருவருக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாக SLT றெயின்போ பேஜஸ் விளங்குகிறது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# மாற்று முதலீட்டுத் திட்டங்களால் ப.சந்தை மீதான நாட்டம் குறைகிறது

## பங்கு முகவர்கள் கருத்து

பங்குச் சந்தையில் தொடர்ச்சியாக இடம்பெற்ற வலிந்த விற்பனையைத் தொடர்ந்து, கடந்த வார கொடுக்கல் வாங்கல்களின் போது பிரதான சுட்டிகள் சரிவைக் காண்பித்திருந்தன.

பங்கு முகவர்களின் கருத்தின் படி, பங்குச் சந்தையினுள் புதிய முதலீடுகள் எதுவும் இடம்பெறத் தவறுவதாகவும், பெரும்பாலானோர் தற்போது வங்கிகளில் நிலையான வைப்புகளின் மீது அதிகளவு வட்டி வீதங்கள் வழங்கப்படுகின்றமையால் அவற்றில் தமது முதலீடுகளை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5407.11 ஆகவும், மிலங்கா விலைச் சுட்டெண் 4955.21 ஆகவும், எஸ்&பி ஸ்ரீலங்கா 20 சுட்டி 2967.31 ஆகவும் அமைந்திருந்தன.

நவம்பர் 19-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்குப் புரள்வு பெறுமதியாக ரூ.6,992,978,755 அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 25,456 பங்குக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் 24,446 ஆகவும் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் 1,010 ஆகவும் பதிவாகியிருந்தன.

**தங்கம் மற்றும் வெள்ளி விலை**

கடந்த வாரம் தங்கத்தின் விலை 24 கரட் பவுணொன்று 58,000 ரூபாயை அண்மித்து காணப்பட்டதாக தங்க நகை வட்டாரங்களின் மூலம் அறிய முடிந்தது. 22 கரட் பவுணொன்று சராசரியாக 53,100 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் இந்த வாரம் தங்கத்தின் விலை சற்று அதிகரித்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5556.32 | 5407.11 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5144.32 | 4955.21 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3028.68 | 2967.31 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 6,992.978 |

*உயர்வடைந்த பங்குகள்* சிலோன் பிறிண்டர்ஸ்(2,297.00), இன்பிராசக்சர்(134.00), லங்கா ஹவுஸ் பிறின்ட்(100.10), சதோச மோட்டர்ஸ்(216.50), ஆஸிரி சென்றல்(250.00).

*வீழ்ச்சியடைந்த பங்குகள்* ரச்வூட்(9.80), ஜி.எஸ்.பினான்ஸ் (510.00), புரஹன் (1106.00), சிலோன் லெதர்(6.10), றோயல் பாம்(42.40)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# 'மொபிட்டல்' இலாபம் அதிகரிப்பு

நாட்டின் தேசிய கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநரான மொபிடெலின் வருமானம், இந்த துறையில் கடும் போட்டி நிலவிய போதிலும், தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

2012 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களுக்கான வருமானம், அதற்கு முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில், ரூ.18.2 பில்லியன் என 14 சதவீதத்தினால் அதிகரித்தது.

மொபிட்டெலின் சந்தாதாரரின் எண்ணிக்கை அதிகரித்ததே வருமான அதிகரிப்பதற்கான முக்கிய காரணமாகும்.

# பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் துறையின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும்-இந்திராவதி



இலங்கை ஆசியாவின் ஆச்சரியமாக திகழவேண்டுமாயின் அதிகளவு பொருளாதார முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக தனியார் துறையைப் பொருளாதார நடவடிக்கைகளில் அதிகளவு பங்களிப்பு செய்வதற்கான நடவடிக்கைகளையும் வாய்ப்புகளையும் வழங்க வேண்டும் என இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்துகொண்டு உரையாற்றிய உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஸ்ரீமுல்யாணி இந்திராவதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தனியார் துறை முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் அமைந்த சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் கவர முடியும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

# வீதிகள் புனரமைப்புக்கு ஆசிய அ/தி வங்கி கடன்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காணப்படும் வீதிகளை புனரமைப்பு செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 98 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க முன்வந்துள்ளது.

சுமார் 200 கிலோ மீற்றர் பாதைகளை புனரமைப்புசெய்ய தேவைப்படும் 112.9 மில்லியன் டொலர்கள் திட்டத்தின் ஒரு பகுதியை வழங்கவே ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

இலங்கை நிதி அமைச்சின் மூலம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவ்வாறு பெறப்படும் நிதி, வட மாகாணம், வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த 19 பாதைகளைப் மீளமைக்கவும், மதகுகள் மற்றும் பாலங்களை சீரமைக்கவும் பயன்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடன் வழங்கலுக்கான உடன்படிக்கையில் இலங்கை திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் றீட்டா ஓ சுலைவான் ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர்.

இந்த திட்டம் 2017 டிசம்பர் மாதம் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அடுத்த ஆண்டு யூன் மாதத்திற்கு இடையில் தற்போது யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு பிரதான வீதி புனரமைப்பு பணிகளை முடிபுறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.84 | 131.72 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 204.90 | 210.49 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 165.15 | 170.36 |
| சுவிஸ் பிராங் | 136.78 | 141.76 |
| கனேடிய டொலர் | 128.34 | 132.74 |
| அவுஸ்திரேலிய டொலர் | 132.90 | 137.75 |
| சிங்கப்பூர் டொலர் | 104.62 | 108.06 |
| ஜப்பான் யென் | 1.55 | 1.60 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.36 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.47 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்கப்பட வேண்டிய தேவைகளுடன் வாழும் நாகர்கோவில் கிராம மக்கள்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நாகர்கோவில் கிராமம் மீள்குடியேற்றத்தின் பின்னர் இன்று வரை பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் காணப்படுவதாக அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராமமானது மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. நாகர்கோவில் கிழக்கு, மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களில் 98 சதவீத மக்கள் கடற்றொழிலையே ஜீவனோபாயத் தொழிலாக கொண்டுள்ளனர். நாகர்கோவில் தெற்கு கிராம அலுவலர் பிரிவு மக்களில் பெருமளவானோர் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றனர்.மேற்படி கிராமத்தில் தொழில் செய்யக்கூடிய வசதிகள் காணப்படுகின்ற போதும் தொழிலில் முதலீடு செய்வதற்கான பண வசதிகள் அற்ற நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பகுதியில் சைவ மதத்தவர்களும் கிறிஸ்தவ மக்களும் வாழ்கின்றனர். இங்கு 78 இந்து ஆலயங்கள் காணப்படுகின்ற போதிலும் 2 இந்து ஆலயங்களே சீர்திருத்தம் செய்யப்பட்டு வழிபாட்டிற்கு உகந்த நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் இரண்டு கிறிஸ்தவ தேவாலயங்களும் காணப்படுகின்றன.

இக்கிராமத்தில் இரு பாடசாலைகள் உள்ள போதும் யா/ நாகர் கோவில் மகா வித்தியாலயமே சுமார் 140 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

மேற்படி பாடசாலையில் ஆசிரியர் வளம் பற்றாக்குறையாக காணப்படுகின்ற அதே வேளை போதிய கட்டட வசதியும் இல்லை. அத்துடன் பாடசாலை வளாகத்தில் மழை காலத்தில் அதிகளவான வெள்ளநீர் தேங்கி நிற்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

மேற்படி கிராமத்தில் சுமார் 80 குடும்பங்களுக்கே தகர கொட்டகைகளினாலான தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் மேற்படி வீடுகள் அரை நிரந்தர வீடுகள் என ஒப்பம் பெறப்பட்டதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இங்கு மக்களினதும் மாணவர்களினதும் அறிவினை விருத்தி செய்யக்கூடிய வகையில் வாசிகசாலைகளோ தேவையை நிறைவேற்றுவதற்கான பொதுநோக்கு மண்டபங்களோ அமைக்கப்படவில்லை. மின்சார வசதிகளும் இது வரை கிடைக்கவில்லை.

பிரதான வீதியை தவிர கிளை வீதிகள் அமைக்கப்படவில்லை என்பதுடன் போக்குவரத்து வசதிகளும் இல்லை. மருத்துவ வசதிகள் இல்லை. மருத்துவ வசதிகளுக்காக எந்த நேரத்திலும் 12 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய கட்டாய நிலையுள்ளது. தொழில்வாய்ப்புக்கள் ஓரளவு காணப்படுகின்ற போதிலும் சந்தைப்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இங்கு நடைபெறும் மணல் அகழ்வு, பச்சை நாவல் மரத்தை விறகிற்றாக வெட்டுதல் போன்ற சட்டவிரோதச் செயல்களும் இது வரை கட்டுப்படுத்தப்படவில்லை. இதனால் எமது வளங்கள் அருகி வருவதாக குறிப்பிடுகின்றனர்.இப்பகுதிக்கு வங்கிகளின் உதவிகள் அரிதாகவே கிடைக்கின்றது. அத்துடன் சோ ஆ நிறுவனத்தின் உதவியும் மிகக்குறைவாகவே கிடைக்கின்றது.

மேற்படி கிராமத்தில் மீள்குடியேற்றி 2 வருடங்கள் கழிந்த நிலையிலும் மேற்குறிப்பிட்ட குறைபாடுகளுடனேயே இன்று வரை ஜீவனோபாயம் நடத்தி வருவதாகவே மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் நாகர்கோவில் கிராமத்தையும் ஒரு கிராமமாக கருதி உரிய நடவடிக்கைகளை செய்து தருமாறு நாகர்கோவில் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9)

Cambridge Management College

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு French, Deutsch ஆகிய மொழிகளில் இலகுவாகப் பேச, எழுத, வாசிக்க, கற்பிக்கப் படுகின்றன.

மற்றும் IELTS, English, IT, Sinhala கற்க விரும்புவர்களுக்கான பிரதியேக வகுப்புகளும் நடைபெறுகின்றன.

6-13 வயது வரையான சிறுவர் சிறுமியர்களுக்கு ICT, English வகுப்புகளும் நடைபெறுகின்றன.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com

## ஜிஎஸ்பி வரிச்சலுகைக்காக

# ஆணைக்குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்துங்கள்

இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கையில் ஆடைக் கைத்தொழில் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வாரம் கொழும்பில் கூடிய ஆடைக் கைத்தொழில் ஏற்றுமதியாளர்களின் பொதுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது இந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாக தமது உற்பத்திகளுக்கு ஐரோப்பாவின் சந்தை வாய்ப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆடைக் கைத்தொழில் நிறுவனத்துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலமே ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிஎஸ்பி சலுகையின் பலன்களை பெற்றுக்கொள்ள முடியும்.

ஏற்றுமதியாளர்கள் சங்கத்தலைவர் யோகான் லோரன்ஸ் இதன்போது கருத்துரைக்கையில், தாம் முகங்கொடுத்து வரும் நட்டங்களை ஒரே இரவில் சரிசெய்து விட முடியாது.

எனவே அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி ஆடைக்கைத்தொழிலை முன்னேற்ற நடவடிக்கை எடுக்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார். (அ-2)

# போதைப்பொருள் வர்த்தகத்தில் பொலிசாருக்கும் தொடர்புண்டு

## பெயர்கள் வெளியிடப்படும் என்றார் கோட்டே மேயர்

(கொழும்பு)

கொழும்பு கோட்டே பிரதேசத்தில் போதைவஸ்து வர்த்தகத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளின் பெயர்களை வெளிப்படுத்தப் போவதாக கோட்டே மாநகரசபையின் மேயர் ஜனக ரணவக்க எச்சரித்துள்ளார்.

தாம் இந்திய பயணத்தை முடித்துக் கொண்டு இந்த வாரம் நாடு திரும்பியதும் இந்தத் தகவல் களை வெளியிடப் போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக செய்தியாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து அதில் வைத்து போதைவஸ்து வர்த்தகத்தில் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளின் பெயர்களை வெளியிடப் போவதாக ஜனக தெரிவித்துள்ளார்.

போதைவஸ்து வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளால் தமது உயிருக்கு ஆபத்து உள்ளதாக அவர் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

எனினும் நாட்டில் உள்ள சட்டத்தின்படி மேயர் ஒருவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கமுடியாது என்று பொலிஸ்மா அதிபர் பதிலளித்துள்ளார்.

இந்த நிலையில் மேயரின் கருத்துக்கள் பொலிஸ் திணைக்களத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# அங்கவீனர் பாதுகாப்புச் சட்டம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைப்பு

## அமைச்சர் பீலிக்ஸ் தெரிவிப்பு

அங்கவீனர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் சட்டமா அதிபரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அங்கவீனர்கள் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண நேற்று முன்தினம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல பதிலுக்கான கேள்வி நேரத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இந்த வினாவை எழுப்பினார்.

குறிப்பாக இலங்கையில் அங்கவீனர்களின் விகிதாசாரம் குறித்தும் 2007 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் அங்கவீனர்களுக்கான சாசனத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதா என்றும் எரான் விக்ரமரட்ண வினவினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, 2011 ஆம் ஆண்டின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் மதிப்பீடுகளுக்கு அமைய 1.62 வீத அங்கவீனர்கள் நாட்டில் இருக்கின்றனர்.

அத்துடன் 2007 ஆம் ஆண்டில் அங்கவீனர்களுக்கான ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது என்றார்.

இதேவேளை 2006 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கவீனர் உரிமைகளை பாதுகாக்கும் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண கேள்வியெழுப்பினார்.

இந்த சட்ட மூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்ததும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார். (அ-2)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:- 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- பூசம் 2
உயரம்:-5'6"
கி.பா.:-7 இல் செவ்.
தொழில்:- A/L தொழில்நுட்பக்கல்லூரி தொழில்நுட்பவியலாளர் (தனியார்)
B/694

பிறப்பு:- 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- சதயம்
உயரம்:-5'11"
தகைமை/ தொழில்:- HNDA கணக்காளர், (தனியார் கம்பனி)
B/695

பிறப்பு:- 1975 இந்து வேளாளர்
நட்சத்திரம்:-பூராடம் 2
உயரம்:-5'8"
கி.பா:-36
தகைமை/தொழில்:- BA ( Hons) பட்டதாரி ஆசிரியர்
B/696

பிறப்பு:- 1984 இந்து
நட்சத்திரம்:- உத்தரம் 3
உயரம்:-5'6"
கி.பா:-54.5 7 இல் செவ்.
தகைமை:-O/L (வியாபாரம், சொந்தம்)
B/310

பிறப்பு:- 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- திருவாதிரை 3
உயரம்:-5'3"
கி.பா:- 77, 8 இல் செவ்.
தொழில்:- கல்வியியற் கல்லூரி, டிப்ளோமா ஆங்கில ஆசிரியர். G/500

பிறப்பு:- 1976 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- கார்த்திகை
உயரம்: 5'
கி.பா:-43.5, 4 இல் செவ்.
தகைமை/தொழில்:-BBA (Hons) ஆசிரியை
G/501

பிறப்பு:- 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்: 5'1"
கி.பா:-24
தகைமை:- ஐசிங் கெயார்ஸ்ரைல் செய்பவர்
G/502

பிறப்பு:- 1992 இந்து வேளாளர்
நட்சத்திரம்:- ஆயிலியம்
உயரம்:- 5'2"
கி.பா:-70
தகைமை/தொழில்:- (நோர்வே)
G/506

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்து நடந்த இடத்திற்கு பொலிஸார் குறுகிய நேரத்திற்குள் வர வேண்டும்

## அதுவே சட்டநடைமுறை என்கிறார் எரிக்பெரேரா

(யாழ்ப்பாணம்)


யாழில் இடம்பெறுகின்ற வீதி விபத்துக்களின் போது போக்குவரத்து பொலிஸார் விபத்து இடம்பெற்று குறுகிய நேரத்திற்குள் அவ்விடத்திற்கு வராவிட்டால் அது தொடர்பில் தம்மிடம் முறையிட முடியும் என யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

நாவலர் வீதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வீதி விபத்தின்போது பொலிஸாருக்கு தெரியப்படுத்தியும் மிக நீண்ட நேரத்தின் பின்னரே அவ்விடத்திற்கு யாழ்.போக்குவரத்து பொலிஸார் வந்திருந்தனர்.

இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதோடு வேண்டத்தகாத குழப்பங்களும் தோன்றியிருந்தன. இது தொடர்பில் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விபத்து இடம்பெற்று அது தொடர்பில் போக்குவரத்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட பின்னர் அவ்விபத்து இடம்பெற்ற இடத்திற்கு 20 நிமிடத்திற்குள் நிற்க வேண்டியது போக்குவரத்து பொலிஸாருடைய கடமையாகும். அது போக்குவரத்து சட்டமுறையின் ஒழுங்கு விதியுமாகும்.

மேற்கூறிய விபத்துச் சம்பவம் தொடர்பில் தான் உரிய போக்குவரத்து பொலிஸார்களிடம் விசாரணை மேற்கொண்டு தக்க பதிலளிப்பதாகவும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறின் அதனை தன்னிடம் தெரிவித்து உரிய தீர்வினைப் பெற முடியும் என்றார் அவர். (அ-4)



நன்றி:- அததெரண.

## பயணிகள் மீது சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்தில் பயணம் செய்த பயணிகளை மானிப்பாய் பொலிஸார் கடும் சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.15 மணியளவில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி தனியார் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த பயணி ஒருவரின் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி திருட்டுப் போனதாக கூறப்பட்டதையடுத்தே மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக வைத்து பயணிகள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக பொலிஸார் சோதனைக்குட்படுத்தினர் என தெரிய வருகின்றது. (அ-6-9)

# தாதியர் விடுதியில் வசதி இன்மையால் தாதியர்கள் இடமாற்றம் பெறுகின்றனர்

## யாழ்.போதனாவின் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் விடுதி வசதி இன்மையால் தென்பகுதி தாதிமார்கள் இடமாற்றம் பெற்று செல்வதாக யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ் இடமாற்றங்கள் கால அடிப்படையில் வழங்கப்படாது பணி ஆரம்பித்து சில மாதங்களிலேயே இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர்கள் தங்குவதற்கு விடுதி வசதி காணப்படுகின்ற போதிலும் அது போதனாவில் பணி புரிகின்ற அனைத்து தாதியர்களுக்கும் போதுமானதாக அமையவில்லை.

இதனால் உள்ளூர் தாதியர்கள் உட்பட வெளிமாவட்ட தாதியர்கள் அனைவரும் பிற இடங்களிலேயே தங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு தங்க வைக்கப்படும் தாதியர்களினால் பெண் தாதியர்களும் கணிசமான அளவில் இருப்பதனால் இவர்களில் வெளி மாவட்ட தாதிமார்கள் இதற்கு தீர்வாக இடமாற்றம் பெற்று வேறு இடங்களுக்கு சென்று விடுகின்றனர். இவ்வாறு அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு வைத்தியசாலையினுள் காணப்படுகின்ற விடுதிகள் போதிய வசதிகளை கொண்டிராமல் இருத்தல், வெளி இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தாதிமார்கள் பாதுகாப்பு இன்மையினை உளரீதியாக உணர்தல் போன்றவையே காரணமாக அமைந்துள்ளன.

இதில் சட்ட முறைகளுக்கு புறம்பான விடயம் என்னவெனில் கால எல்லை அடிப்படையில் தாதிமார்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படுகின்ற போதிலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற தென் பகுதி தாதிமார்கள் இங்கு நிலவும் விடுதி வசதியின்மையினை காரணம் காட்டி விரைவில் இடமாற்றம் பெற்று சென்று விடுகின்றனர்.

இக்காரணமும் யாழ்.போதனாவில் நிலவுகின்ற தாதிய பற்றாக்குறைக்கு காரணமாக அமையலாம். இதனை விட யாழ்.தாதியப் பயிற்சி கல்லூரியில் புதிதாக இணையும் மாணவர்கள் கூட இங்கு காணப்படுகின்ற விடுதி வசதி இன்மையினை காரணம் காட்டியும் இங்கு பணியாற்றுவதற்கு பின்னடிப்புச் செய்கின்றனர்.

இப் பிரச்சினை தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் பல முறைகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பில் அவர்கள் நடவடிக்கையேதும் எடுப்பதாக தெரியவில்லை. யாழ்.போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளரான கலாநிதி ஸ்ரீ பவானந்தராஜாவினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பிரகாரம் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள மின்சார சபையினது காணி யாழ்.போதனாவிற்கு வழங்குவது என யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் உறுதியளித்துள்ளார்.

அந்த வகையில் குறித்த காணியினை விரைவில் பெற்று அதில் தாதியர்களுக்கு உரிய விடுதியினை அமைத்து தருமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எமது இப் பிரச்சினை தொடர்பில் தீர்வினை வழங்குவதற்கு தொடர்ந்தும் காலதாமதம் செய்யப்பட்டால் அதனால் பாதிக்கப்படப் போவது நாங்களல்ல நோயாளர்களே என தாதியர் சங்கத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும் இப்பிரச்சினைகள் தொடர்பில் வைத்தியசாலைக்கு வரும் வெளிநாட்டு பிரதிநிதிகள் சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளுக்கு தாம் ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளதாக யாழ்.போதனாவின் பதில் பணிப்பாளர் முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# பிரபல்யம் என்ற நிலைக்குள் கல்வி மழுங்கடிக்கப்படுகிறது

## வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

பிரபல்யம் என்ற நிலைக்குள் கல்வி மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. கிராமப்புற பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதற்கும் இதுவே முக்கிய காரணம் எனவும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா நேற்று பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்பப் பாடசாலைகள் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. பாடசாலைகளில் பௌதீக வளங்கள் நிறைவாகயிருந்தால் மட்டும் மாணவர்களுக்கு சிறந்த கல்வியினை புகட்ட முடியாது. இதற்காக திறமையான ஆசிரியர்கள் தேவை.

தனது பிள்ளையை எந்தப் பாடசாலையில் சேர்த்துப் படிக்க வைக்க வேண்டும் என்ற முடிவினை எடுக்கும் உரிமை ஒவ்வொரு பெற்றோருக்கும் உண்டு. மாணவர்களின் கல்வியும் பெற்றோர்களிடமே தங்கியுள்ளது.

மேலும் வெற்றி பெறுவதை விட அந்த வெற்றியை எவ்வாறு தக்க வைத்துக் கொள்வது என்பது முக்கியமானது. அத்தோடு யுத்தத்திற்குப் பின்னராக காலப்பகுதியில் நாம் அடைந்த வளர்ச்சியை ஒப்பிடக்கூடாது. கடந்த 30 வருடத்தில் நாம் இழந்ததை ஒப்பிட்டு தேவைகளை ஒப்பீடு செய்ய வேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநர் கல்விக்கு அதிகளவில் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். அக்கறையுடன் பல அபிவிருத்திப் பணிகளை செய்தும் வருகிறார். மேலும் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதோடு நின்றுவிடாது அறிவுசார் சமூகத்தை உருவாக்க ஆசிரியர்கள் பாடுபட வேண்டும்.

மாணவர்களின் அறிவுசார் சமூகமாக மாற்றப்பட வேண்டும். அப்போதுதான் வெற்றிகள் தக்க வைக்கப்படும். எனவே, ஊட்டப் பாடசாலைகள் என அழைக்கப்படும் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளின் வளர்ச்சி மிகவும் முக்கியமானது. பொதுக் கல்வியை மாற்றி தரமான கல்விக்கு மாணவர்களைக் கொண்டு வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# விடுவிக்கப்பட்ட பிரதேசம் வரை போக்குவரத்து நடைபெற வேண்டும்

## மாதகல் மேற்கு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாதகல் மேற்கு பிரதேசம் கடந்த 30 வருடங்களுக்கு பின்பு தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்திற்கு தமது காணிகளை துப்புரவு செய்வதற்காக சென்று வருவதற்கு பேருந்து சேவைகள் நீடிக்கப்படவில்லையென அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது தமது காணிகளை, வீடுகளை துப்புரவு செய்வதற்காக மாதகல் மேற்கு பிரதேசத்திற்கு ஒவ்வொரு நாளும் மக்கள் சென்று வருகின்றனர். ஆனால் பேருந்து சேவைகள் முன்னர் நடைபெற்ற மாதிரியே துறைமுகச் சந்தி வரைதான் நடைபெறுகிறது.

இந்த துறைமுகச் சந்தியிலிருந்து மக்கள் தற்போது விடுவிக்கப்பட்ட வாசிகசாலைச் சந்தி வரை நடந்தே செல்ல வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் காணிகளை துப்புரவு செய்வதற்காக எடுத்துச் செல்லும் உபகரணங்களை சுமந்து கொண்டு செல்வதும் மீண்டும் திரும்பி சுமந்து கொண்டு வருவதும் மிகவும் வருத்தம் தரும் செயலாகவே உள்ளதாக அவர்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதி விடுவிக்கப்பட்டு சுமார் ஒரு மாதம் கடந்த நிலையிலும் இன்று வரை இவ்வாறே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே, சம்பந்தப்பட்ட இ.போ.ச. அதிகாரிகள், தனியார் போ.சங்க அதிகாரிகள் இவற்றிக்கான போக்குவரத்து வசதிகளை சீர்செய்து தருமாறு மாதகல் மேற்கு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9)

## ஆதன வரி நடவடிக்கைகள் கணனிமயப்படுத்தப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் ஆதன வரி நடவடிக்கைகள் கணனிமயப்படுத்தப்படவுள்ளது.

சபை உறுப்பினர் சற்குணதேவன் மாதாந்த கூட்டத்தில் மேற்படி பிரேரணையை கொண்டு வந்தார். இதனை சபை உறுப்பினர்கள் ஆமோதித்ததை தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஆதன வரி நடவடிக்கைகள் கணனி மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சபையின் தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி கடற்பகுதியில் மீண்டும் முளைவிட்டுள்ள பாஸ் நடைமுறை

## நீக்குமாறு சபையில் வலியுறுத்தினார் சந்திரகுமார் எம்.பி.

(கொழும்பு)

வடபகுதி கடற்றொழிலாளர்களை இரண்டாம் தரப்பிரஜைகளாக நடத்தும் போக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பாஸ் நடைமுறை நீக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சுத் தொடர்பான வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் கடந்த 23 ஆம் திகதி பாராளுமன்றில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு பிரதேசத்தில் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும் பாஸ் நடைமுறை கடற்றொழிலாளர்களுக்கு பாரிய பிரச்சினையாக இருக்கிறது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நான்கு வருடங்கள் முடிவடைந்துள்ள நிலையிலே தொடர்ந்தும் கடற்படையினரால் பாஸ் நடைமுறை பின்பற்றப்படுவது அங்குள்ள கடற்றொழிலாளர்களுக்கு மிகப்பெரிய அசௌகரியத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக மன்னாரிலிருந்து முல்லைத்தீவு வரையிலுள்ள பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தும் பாஸ் நடைமுறை இருந்து வருகின்றது. இது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயம். தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தும் போக்கு தவிர்க்கப்பட வேண்டும்.

யுத்தகால கட்டங்களில் பாரிய நெருக்கடிக்குள்ளாகியிருந்த கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் இன்று படிப்படியாக பாரிய முன்னேற்றத்தை எட்டிக் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு கடற்கரைப் பிரதேசம் தான் கடற்றொழில் மேற்கொள்ளப்படுகின்ற பாரியளவு கடல்நீர் பரப்பைக் கொண்ட பிரதேசமாக இருக்கின்றது. அங்குள்ள கடற்றொழிலாளர்களினால் பிடிக்கப்படுகின்ற மீன்களைச் சந்தைப்படுத்துவதில் எழுந்துள்ள பிரச்சினை தொடர்ச்சியாக பாரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கின்றது.

அதனை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பொழுதிலும் தனியார் மீன் விற்பனைத்தரகர்கள் கடற்றொழிலாளர்களினால் பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கு நியாயமான விலைகளை நிர்ணயிக்காதிருக்கும் நிலைமை கருத்திலெடுக்க வேண்டிய விடயமாக இருக்கின்றது. குறிப்பாக வட மாகாணத்தில் பிடிக்கப்படும் மீன்களுக்கு நிலையான விலையை நிர்ணயம் செய்து மீன் சந்தைப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுகின்றேன்.

மேலும் வரவு செலவுத்திட்டத்தினூடாக கடற்றொழில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தின் கீழ் குருநகர் கடற்றொழில் துறைமுகம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று மாதகல் , பருத்தித்துறை, இன்பசிட்டி போன்ற இடங்களிலும் கட்றொழில் துறைமுகங்கள்ள அமைப்பதற்கான நடவடிக்கைகளை சமகாலத்தில் மேற்கொள்ள வேண்டுமெனவும் நான் இங்கு வலியுறுத்துகின்றேன். அது மட்டுமின்றி கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளிக்குடா, நாச்சிக்குடா, வலைப்பாடு, கிளாலி போன்ற இடங்களில் கடற்றொழில் இறங்குதுறைகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.

யாழ்.மாவட்டத்திலே குறிப்பாக நயினாதீவு, கிளாலி, சுழிபுரம், திருவடிநிலை, மாதகல் பிரதேசங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்திலே குறிப்பாக பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் பள்ளிக்குடா, இரணைமாதாநகர், வலைப்பாடு போன்ற பிரதேசங்களிலும் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் இந்த பாஸ் நடைமுறை இறுக்கமாக கடைப்பிடிக்கப்படுகின்றது. இது அநாவசியமான ஒரு நடைமுறையென்று தான் நான் கருதுகின்றேன்.

இந்த நடைமுறையானது ஒரு குறுகிய காலத்துக்கும் இல்லாமல் செய்தாலும் கூட மீண்டும் ஏதோ ஒருவகையில் இந்த நடைமுறையினை பின்பற்றும் நிலைமை ஏற்படுகின்றது. எனவே நீங்கள் இவ்விடயத்தை கவனத்திலெடுத்து இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தர தீர்வொன்றினைப் பெற்றுத்தர வேண்டும் என கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரிடம் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# நோர்வேயின் சமாதான முயற்சிகளை பாராட்டுவதற்கு பின்னடித்த ஜனாதிபதி

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

நோர்வேயின் சமாதான முனைப்புக்களை பாராட்டினால் தேர்தலில் தோல்வியைத் தழுவ நேரிடும் என தற்போதைய ஜனாதிபதியும் அப்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ கூறியதாக விக்கலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அந்நாட்டு இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டாடிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கூறியதாக அக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

சமாதான ஏற்பாட்டாளர் பணிகளை நோர்வே அரசாங்கம் சீரிய முறையில் மேற்கொண்டு வருவதாகவும் வேறு தரப்பினரை ஈடுபடுத்த திட்டம் கிடையாது.

இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு மற்றும் நோர்வே அரசாங்கத்தின் பணிகள் பாராட்டுக்குரியது.

எனினும் இந்த விடயங்களை வெளிப்படுத்தினால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாத நிலைமை ஏற்படும்.

தெற்கை சேர்ந்த 98 வீதமான மக்கள் நோர்வே அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாகவே கருதுகின்றனர்.

இதனால் நோர்வே அரசாங்கத்தை பாராட்டும் வகையிலான அறிவிப்புக்கள் தேர்தல் தோல்விக்கு வழிகோலும். எவ்வாறெனினும் சமாதான முனைப்புக்கள் நூறு வீதம் முன்னெடுக்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

தேர்தலில் வெற்றியீட்டினால் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேருக்கு நேர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த தயார் என தாம் தேர்தலில் பிரசாரம் செய்துள்ளதாக குறிப்பிட்டார் என அச் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தாழமுக்க நிலை காரணமாக மழை தொடர்ந்து பெய்யலாம்

(கொழும்பு)

நாட்டின் கிழக்கு திசை கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலை காரணமாக நாட்டின் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்யலாம் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இந்த தாழமுக்க நிலையினால் அதிக அளவான மழை மேகங்கள் நாட்டை சூழ்ந்து காணப்படும் என்று தெரிகிறது.

இதனால் நாட்டின் பலபாகங்களில் மாலை மற்றும் இரவு வேளைகளில் கடுமையான இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக கிழக்கு, வடக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் கடுமையான மழை வீழ்ச்சி ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் வடிநாலகல, கியுலோகம், தேவாலஹிந்த போன்ற பகுதிகளில் நேற்று முன்தினம் நில அதிர்வு உணரப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் புவிசரிதவியல் மற்றும் சுரங்கத்தொழில் திணைக்களத்தின் தலைவர் தெரிவிக்கையில்,

நில அதிர்வுகள் குறித்து ஆராய்வதற்கான மூன்று கருவிகள் இலங்கையில் பொருத்தப்பட்டுள்ளன. எந்த நில அதிர்வும் இந்த கருவிகளில் பதிவாகி இருக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார், (அ-2)




உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் தலைமையகமும் அதன் பிராந்திய அலுவலகங்களும் திறைசேரி செயலாளரின் பணிப்புரைக்கமைய நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய வரிவார கருத்தரங்கு அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது இந்நிகழ்வின் போது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரவு செலவுத்திட்டம் 2013 ஒரே பார்வையில்

16

2013 ஆம் ஆண்டினை அரசாங்க சேவையின் அதி உன்னத வருடமொன்றாக பிரகடனப்படுத்துவதற்கு அனைத்து அரசாங்க ஊழியர்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த சேவை வழங்கலினை கள மட்டத்தில் கண்காணிப்பதற்கு இடமிருந்த தொழில்நுட்ப உதவிகளைப் பெற்று அமைச்சரவை செயலகத்தில் இதற்கான விசேட அலகொன்றினை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.


48.4 கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்க ஊழியர்களுக்கான நியாயமான சம்பள ஏற்பாடானது ஊழியர்களின் தேவை. அதேபோன்று அதன் சுமையினை அரசாங்கத்தினால் தாங்கிக் கொள்ள முடியுமா என்ற நிலைமை இரண்டினையும் கருத்திற்கொண்டு நோக்கப்படுதல் வேண்டும். எல்லாவற்றையும் விட அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளங்கள் மக்களிடமிருந்து சேகரிக்கப்படும் வரிகளிலிருந்து செலுத்தப்படுகின்றன. எனவே எந்தவொரு சம்பள அதிகரிப்பும் மக்களினால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியுமானால் மாத்திரமே நியாயமானதாக இருக்கும். அரசாங்க ஊழியர்கள் யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தியை முகாமை செய்ய வேண்டிய மற்றும் வறுமையற்ற நடுத்தர வருமான பொருளாதாரமொன்றாக வளர்த்தெடுக்கும் பின்னணியில் எதிர்கொள்கின்ற நிர்வாக சவால்களையும் பொறுத்துக் கொள்கின்ற பணியினை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அரசாங்க ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் இந்த நாட்டினை பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுக்கின்ற மனிதாபிமான நடவடிக்கை இடம்பெற்ற போதும் 2009 இலும் அதேபோன்று இவ்வருடத்திலும் உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சந்தர்ப்பத்திலும் அவர்களது பொறுப்புடைமையினை அர்ப்பணிப்புடன் வழங்கியுள்ளனர். எனவே அரசாங்க சம்பளங்கள், ஓய்வூதிய உரிமைகள், தொழில்புரிகின்ற சூழல் மற்றும் திறன் அபிவிருத்தி ஏனைய துறைகளினை விட கவர்ச்சிகரமானதாக இருக்கும். தொழில் பாதுகாப்பு என்பவற்றினை உறுதி செய்து வருகின்றது. எனவே அரசாங்க துறைக்கான அனைத்து சம்பள கட்டமைப்புக்களையும் மீள் பரிசீலனை செய்வதுடன் அரசாங்க துறை மற்றும் தனியார் துறையினரின் சம்பளம் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் தேசிய சம்பளக் கொள்கையொன்றினை உருவாக்குவதற்கும் புதிய சம்பள ஆணைக்குழுவொன்றிணை நான் முன்மொழிகின்றேன்.

48.5 கௌரவ சபாநாயகர் அவர்களே, அடுத்த வருடத்திலிருந்து மாதமொன்றுக்கு ஆகக் குறைந்தது ஆயிரத்து 500 ரூபாவினால் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் ஜனவரி மாதத்திலிருந்து மாதமொன்றுக்கு 750 ரூபா வாழ்க்கைச்செலவு கொடுப்பன்வாக வழங்கப்படும். மீதித் தொகையானது அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் மேலதிக கொடுப்பனவொன்றாக ஆகக் குறைந்த ரூபா 750 மற்றும் ஆகக் கூடியது ரூபா 2 ஆயிரத்து 500 என்ற வகையில் அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதமாக மேலும் வழங்கப்படும். அபிவிருத்திச் செலவீன திட்டங்களின் அழுத்தத்தினை குறைக்கும் வகையில் அத்தகைய அதிகரிப்புகளினால் ஏற்படும் பணவீக்க அழுத்தத்தினை கவனத்திற் கொண்டு முன்மொழியப்பட்ட 5 சதவீத அதிகரிப்பில் 50 சதவீதத்தினை 2013 மே மாதத்திலிருந்தும் மீதியை செப்டெம்பரிலிருந்து வழங்குவதற்கும் முன்மொழிகின்றேன். அனைத்து பதவிநிலை அலுவலர்களும் 50 சதவீதத்தினை 2013 ஜுலையிலிருந்தும் மீதியை 2013 ஒக்டோபரிலிருந்தும் பெறுவர். மேலும் நீதிபதிகள், பல்கலைக்கழக கல்விசார் பதவியினர், மருத்துவ தொழில்புரிநர்கள் மற்றும் விசேட பங்களிப்புக்களை வழங்கும் விசேட வகுதியிநர்களுக்கான சேவை தொடர்பான புதிய கொடுப்பனவுகளை வரவு செலவுத்திட்ட வரையறைக்குள் தாங்கிக் கொள்ள முடியுமான வகையிலும் நடுத்தரக் காலத்தின் போது அவற்றினை நிலையாக பேணும் ஆற்றலுடன் 2013 ஜனவரியிலிருந்து செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

48.6 கௌரவ சபாநாயகர் அவர்களே, அக்ரஹார காப்புறுதி திட்டத்திற்கான காப்புறுதிக் கொடுப்பனவினை ரூபா 125 ஆக திருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். மரணத்தின் போது ஒரு இலட்சம் ரூபாவினை காப்புறுதி பயனாக பெறுவதற்கும் சிறுநீரக மாற்று, புற்றுநோய் மற்றும் இருதய சத்திரகிச்சைகளுக்காக 5 இலட்சம் ஆகவும் அதிகரிப்பதற்கு நான் மேலும் முன்மொழிகின்றேன்.

49 பாராளுமன்ற கட்டடத்தொகுதியினை நவீனமயப்படுத்தல்

49.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, 1975 இல் திறந்து வைக்கப்பட்ட பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று 1988 இல் நிர்மாணிக்கப்பட்ட உயர்நீதிமன்ற கட்டடத்தொகுதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வரவு செலவுத்திட்ட மதியுரைக் கூட்டங்களின் போது நீங்கள் அனைவரும் பாராளுமன்ற கட்டடத்தொகுதியினையும் 1982 இல் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்ற அலுவலர்களின் வதிவிட வசதிகளையும் புதுப்பித்து நவீனமயப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியிருந்தீர்கள். இந்த பாராளுமன்றத்தின் பொறுமை பாதுகாக்கப்படும் வகையில் அதன் கட்டடக் கலையம்சங்களை பேணுவதுடன் அதன் சுற்றுச்சூழலின் உயிரியல் பல்வகைத்தன்மை பாதிக்கப்படாமலும் நவீனமயப்படுத்துவதற்கான ஒத்துழைப்பினை எமது நட்பு நாடுகளிடமிருந்து உதவியாக கோருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே இரண்டு வருட நிகழ்ச்சித்திட்டமாக இம்முன்னெடுப்பினை மேற்கொள்வதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.



50 முடிவுரை

50.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, இங்கு நான் சமர்ப்பித்த வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் அனைத்தும் 2013 ஜனவரியிலிருந்து அமுலாகும். அடுத்த மூன்று வருடங்களின் போது அடையப்பட வேண்டிய மூன்று முக்கிய நோக்கங்களை இலக்காக கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும். எமது நாட்டினை வறுமையற்ற நடுத்தர வருமான பொருளாதாரமாக மாற்றுவதுடன் உணவு, நீர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றினை உறுதிப்படுத்தும் அதேவேளை தரமான கல்வி திறன், அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப எழுச்சியொன்றின்பால் நாட்டினை கொண்டு செல்வதாகும். நிதி நெருக்கடிகள் மற்றும் பாதகமான சர்வதேச நிலைமைகள் காணப்பட்ட போதிலும் அரசாங்க சேவை மற்றும் தனியார் கட்டமைப்பில் மேலதிக ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு நான் தீர்மானித்துள்ளேன்.ஏனெனில் மேற்குறிப்பிட்ட இலக்குகளை அறிந்து கொள்வதற்கான அபிவிருத்தி செயன்முறைக்கான பொறியியலாளராக அரசாங்க மற்றும் தனியார் துறையின் அர்ப்பணிப்பு மாத்திரமே இருக்க முடியுமென நான் நம்புகிறேன்.

50.2 கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாடு மிலேனியம் அபிவிருத்தி சுட்டிகளில் உயர்மட்ட செயலாற்றுகையினை எட்டிப்பிடித்துள்ளது. வேலையின்மை, பணவீக்கம், வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை போன்ற பொருளாதார சுட்டிகள் வீழ்ச்சியடைவதற்கு முன்னேற்றத்தை நோக்கிய எமது பயணம் உறுதியாக காணப்படுகின்றது. புகழ்பெற்ற சர்வதேச முகவர்களினால் எமது நாடு முதலீடு மற்றும் சுற்றுலா துறைக்கான சிறந்த இடமாக ஏற்றுக்கொள்ளப்படுவது அதிகரித்த வண்ணம் உள்ளது. வியாபாரத்தை மேற்கொள்கின்ற சிறந்த 30 நாடுகளில் ஒரு இடத்தினை நாம் எட்டிப்பிடித்துள்ளோம் என்ற வகையில் நாம் ஆற்றல் மிக்கவர்களாக இருக்கின்றோம். ஒவ்வொரு அரசாங்கமும் கடந்த காலங்களில் ஏனைய நாடுகளை முன்மாதிரியாக கொண்டிருந்தன. அபிவிருத்திக்கான மாற்றீடுகளை மாத்திரமே அவ்வாறு மாதிரிகளை பின்பற்றியவர்கள் படிப்படியாக அவற்றை விட்டும் விலகிச் சென்றனர். ஏனெனில் அவர்கள் அபிவிருத்திக்கு பொறுப்பாக இருந்த போது ஏழு வருடங்களுக்கு அத்தகைய சாதகமான போக்கில் அவர்களினால் நிலைத்திருக்க முடியாமல் போனது. ஏழு வருடங்களில் அனைத்து பிரச்சினைகளும் இல்லாமல் போனது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாடு சாதகமான நிலைமைக்கு செல்லவில்லை. உண்மையை சொல்வதென்றால் இது வறுமையற்ற உறுதியான பொருளாதாரம் ஒன்றினை நோக்கிய மாற்றமொன்றாகும். மின்சாரம், நீர், துப்பரவேற்பாடு, வீட்டு வசதிகளை வழங்குவதை மாத்திரம் கொண்ட மாற்றமொன்றல்ல. மாறாக இது தரமான கல்வி மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையொன்றினையும் கொண்டிருக்கின்றது. இது உணவு, மின்சாரம், சக்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பதனை உறுதிப்படுத்துகின்ற நாடொன்றினை நோக்கிய மாற்ற மொன்றாகும். இது எம் அனைவரினதும் படைப்பொன்றாகும். உண்மையில் இது எமக்கான பயணமொன்றாகும்.

50.3 கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்தப் பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சி மற்றும் அரசாங்க தரப்பு உறுப்பினர்கள் அனைவரும் தேசிய நலனுக்காக நாம் ஒன்றுபட்டு செயற்பட முடியும் என்பதனை வெளிக்காட்டியிருக்கின்றனர்.

குடும்ப விழுமியங்களினால் பேணி வளர்க்கப்பட்ட பாரம்பரிய கிராமிய மரபுரிமையின் செல்வாக்கிற்குட்பட்ட நீண்ட கால அரசியல் அனுபவங்களினால் பெறப்பட்ட முதிர்ச்சி மற்றும் பொதுநலவாய பாராளுமன்ற மாநாட்டினை நடத்துவதற்கு இந்தப் பாராளுமன்றத்திற்கு உங்களால் வழங்கப்பட்ட தலைமைத்துவமானது நாம் சிறுவர்களாக இருந்த போது மறைந்த எனது தந்தை டீ.ஏ. ராஜபக்ஷ அவர்கள் வழங்கிய அமைதியான தலைமைத்துவத்தினை ஞாபகப்படுத்துகின்றது. எமது தேசத்தின் சுமையாக காணப்படுகின்ற பிரச்சினைகளை நாம் தீர்த்து வைப்பதற்கு இதுபோன்ற உணர்வுடன் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும்.

50.4 எமது மக்களுக்கு அதிகாரப் பகிர்வினை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு தற்பொழுது காணப்படும் மாகாண சபை முறைமை மாற்றப்படவேண்டியது அவசியமாகும். அதிகார பகிர்வு என்பது எம்மை கூறுபோடுகின்ற அரசியல் மறுசீரமைப்பாக இருக்க முடியாது. அது எம் அனைவரையும் ஒன்றுபடுத்த வேண்டும். அத்தகைய மறுசீரமைப்புக்கள் அதிக செலவீனம் கொண்டதாகவோ மக்கள் மீது சுமையினை ஏற்படுத்தக்கூடிய சிக்கலான நிர்வாக கட்டமைப்பினையோ கொண்டிருக்க முடியாது. இலங்கையின் எல்லா பகுதிகளிலிருந்தும் என்னை சந்தித்த தமிழ், முஸ்லிம் அல்லது சிங்களவர் அனைவரும் கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு சிறந்த வாழ்க்கைத்தரம் மற்றும் நாட்டில் சம அந்தஸ்துடன் வாழ்தல் என்பவற்றையே வேண்டினர். தேசிய தராதரங்களை பயன்படுத்தி மாகாண முரண்பாடுகளை இல்லாதொழிப்பதே தேசிய நல்லிணக்கத்தினை ஊக்குவிப்பதற்கான பிரதான ஆயுதமாகும். இந்த அரசாங்கம் எமது மக்களின் அபிலாசைகள் அனைத்தையும் நிறைவேற்றி வைப்பதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது.

50.5 எனவே எதிர்க்கட்சி தலைவர், தமிழ்த்தேசிய கூட்டணியின் தலைவர் மற்றும் மக்கள் முன்னணியின் தலைவர் போன்றவர்களை எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆக்கபூர்வமாக எம்முடன் ஒத்துழைக்க வருமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன். இம்முயற்சியானது எமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் வெளிநாடுகளின் தலையீடுகளினை ஏற்படுத்தாது மிகவும் சுயமரியாதையுடன் கூடியதாகும். எதிர்க்கட்சி தலைவர், தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர் மற்றும் நான் உட்பட இப்பணியினை முன்னெடுத்துச் செல்வதற்கு எமது வாழ்க்கையிலும் அரசியலிலும் போதியளவான அனுபவத்தினை பெற்றிருக்கின்றோம்.

50.6 கௌரவ சபாநாயகர் அவர்களே, வறுமை தணிப்பு மற்றும் எமது குறை வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு என்பவற்றின்பால் எமது பயணம் பாராளுமன்றத்தில் கடினமானதாக இருந்ததுடன் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினை தாபிக்கின்ற சட்ட மூலத்தினை அங்கீகரிப்பதில் நீண்ட செயன் முறையினை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. இது எமது தேசம் ஆபத்துக்களிலிருந்து விடுபட்டுவிட்டதென ஓய்வாக இருப்பதற்கு தம்மை அனுமதிக்கின்ற மைல் கல்லாக இருக்க முடியாது என்பதனை காட்டுகின்றது. அரசியல், பொருளாதார மற்றும் இயற்கை சுனாமிகள் என பல இருக்க முடியும். அவை அனைத்தும் எதிர்வுகூற முடியாதவையாகும். இந்த வகையில் வறுமையினை இல்லாதொழித்து வறிய மக்களின் வாழ்க்கை சூழலை தரமுயர்த்துவது எமது விடுபடாத இலக்காகும். 2015 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற இலங்கையினை உருவாக்குவதற்கும் நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோமாக ! மும்மணிகளினதும் ஆசீர்வாதம் கிடைக்கட்டும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

113

**தமிழரசுக் கட்சியின் தோற்றம்**

கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இந்தியத்தமிழருக்கு,



டட்லி சேனனாயக்கா -பிரதமர்

இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம், இலங்கையில் வாழ்ந்த தமிழர்களில் மூன்றில் ஒரு பகுதியினரை நாடற்றவர்களாக் கியது. ஒற்றையாட்சியின்கீழ் படிப்படியாக உரிமைகள் பறிக்கப்பட்டு இரண்டாந்தரப்பிரஜைகள் ஆக்குவதற்கு சிங்களத் தலைமை திட்டமிடுவது புரிந்தது. அதனால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கட்சியிலிருந்து விலகினார். சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையை முன்வைத்து அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தார். அதனால் முதன் முதலாகத் தமிழர் மத்தியில் பிரிவினைவாத அரசியல் தொடங்கப்பட்டது. பிரஜாவுரிமைப் பறிப்பின் பின்னர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடத்தப்பட்டது.

**தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றங்கள்**

இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வந்தபோது இலங்கையில் ஐந்து




பிரதமர்- சேர்.ஜோன். கொத்தலாவளை

இராச்சியங்கள் இருந்தன எனப் பார்த்தோம். அவற்றில் யாழ்ப்பாண இராச்சியம் ஒன்றாகும். ஒல்லாந்தர் காலத்தில் கண்டி இராச்சியம் தவிர்ந்த கரையோரங்கள் அனைத்தும் அவர்களால் நிர்வகிக்கப்பட்டது. மட்டக்களப்புக் கரையோரமும் அவர்களால் கைப்பற்றப்பட்டிருந்தது. அவர்கள் வடபகுதியையும் கிழக்குப் பகுதியையும் தமிழர் வாழும் பிரிவாக்கி யாழ்ப்பாணக் கொமாண்டரி எனப் பெயரிட்டனர். அவ்வாறு பிரிப்பது அவர்களுக்கு இலகுவாகவிருந்தது. இந்த யாழ்ப்பாணக் கொமாண்டரியை பல மைல்கள் அகலமான காடு பிரித்திருந்தது. அதனால் அதனைத் தனித்ததொரு பிரதேச அலகாகக் கருத வைத்தது. பிரித்தானியர்கள் இலங்கையை 5 மாகாணப் பிரிவுகளாப் பிரித்து ஆண்டனர். தெதுறு ஓயாவுக்கும் யான் ஓயாவுக்கும் வடபகுதி முழுவதும் வடமாகாணம் எனப்பட்டது. இது இன்றைய வடமாகாணப்பிரிவிலும் பார்க்க, பரப்பில் இருமடங்காகும்.

1946 இல் இலங்கையை 9 மாகாணங்களாக இறுதியாக வகுத்தபோது, தமிழ் மக்கள் வாழ்கின்ற வடக்குப் பிரதேசம் ஒரு மாகாண

**தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்கள்**




# சுதந்திர இலங்கை


மாகவும் கிழக்குப் பிரதேசம் இன்னொரு மாகாணமாகவும் பிரிக்கப் பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்றபோது அவர்கள் தமிழ் மக்களின் நலனைப் பேணத் தவறிவிட்டனர். ஆங்கிலேயர் கப்பலேறியபோது இலங்கையை ஒற்றையாட்சியின்கீழ் அடக்கிக் கொடுத்தனர். அக்காலத்து அரசியல் தலைவர்களும் தெளிவான இரண்டு இனங்கள் ஒற்றையாட்சியின்கீழ் வாழலாமெனத் தப்புக் கணக்கிட்டனர். 1940 களில் அரசானது தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றங்களை உருவாக்கி சிங்கள மக்களைக் குடியேற்றுகின்ற செயற்பாடுகள் ஆரம்பமாகின. முக்கியமான மட்டக் களப்புக்குத் தெற்கே கல்ஓயாக் குடியேற்றம் தொடங்கப்பட்டு அப்பாந் தோட்டைப் பகுதியிலிருந்து சிங்கள மக்கள் அங்கு குடியேற்றபட்டனர். அதன்கீழ் உருவாக்கப்பட்ட 44 குடியேற்றக் கிராமங்களில் 36 கிராமங்கள் சிங்கள மக்களுக்கு ஒதுக்கப்பட்டன. மகாவலிகங்கையிலிருந்து கும்புக்கன் ஓயாவரை பரவியிருந்த மட்டக்களப்புப் பிரதேசத்தை திட்டமிட்ட முறையில் இரு அலகுகளாகப் பிரித்தது. மட்டக்களப்பு மாவட்டம் 7004 சதுர கிலோ மீற்றர்ப் பரப்பினைக் கொண்டிருந்தது. அதில் மூன்றில் இரண்டு பங்கு பரப்பினை அதாவது 4599 சதுரகிலோ மீற்றர்ப் பரப்பினைக் கொண்டதாக 1959 இல் அம்பாறை என்ற மாவட்டம் உருவாக் கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து உருவாக்கப்பட்ட சங்கமம், நாவலாறு, அம்பலனோயா திட்டங்கள் மூலம் அம்பாறை மாவட்டத்தில் இன்று 37.8% சிங்கள மக்களாவர். அதேபோல மதறுஓயாத் திட்டம், மட்டக்களப்பில் 10% நிலப்பரப்பினைத் துண்டித்து மாத்தளை மாவட்டத்துடன் சேர்த்துள்ளது. சிங்களக் குடியேற்றங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் திருகோணமலையாகும். கந்தளாய்த் திட்டம், மொறவெவத்திட்டம், பதவியாத்திட்டம், வாகல்கடவெலத் திட்டம், ஏராளமான கிராம விஸ்தரிப்புத்திட்டங்கள் என்பனமூலம் திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் அதிகரித்தது. இம் மாவட்டத்தில் இன்று 33.4% சிங்கள மக்களாவர். வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம், உலுக்குளம், மாமடுவ, மடுகந்த என்பன இவ்வாறான குடியேற்றங்களாம். முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறுக் குடியேற்றத்திட்டம் (வெலிஓயா) ஒரு ஆக்கிரமிப்புக் குடியேற்றத் திட்டமாகும்.



அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் ஸ்தாபித்தவர்-எஸ்.ஜே.வி.செல்வநாயகம்

**நிர்வாக ரீதியாக புதிதாக வகுக்கப்பட்ட அம்பாறை மாவட்டம்-1959**




டி.எஸ்.சேனனாயக்காவின் பின்னர் டட்லி சேனனாயக்கா பிரதமரானார். 1953 இல் அரிசிப்பங்கீட்டுக்கான மானியத்தை நீக்கியபோது ஏற்பட்ட குழப்பத்தால் டட்லி சேனனாயக்கா தன் பிரதமர் பதவியைத் துறந்தார். அதற்குமுதல் 1951 இல் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தன் ஆதரவாளர்களுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிக் கொண்டார். டட்லி சேனனாயக்காவின் பின்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

சேர்.ஜோன்.கொத்தலாவளை பிரதம மந்திரியானார். இவர் காலத்தில் அகில இலங்கைப் பௌத்தசபை நிறுவப் பட்டது. எனினும் பௌத்த சங்கத்தினர், ஆசிரியர்கள், வைத்தியர்கள், விவசாயிகள், தொழிலாளர் ஆகிய ஐந்து வகுப்பார், இச்சபைக்கு எதிராகவிருந்தனர். அதனால் 1956 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் கை ஓங்கியிருந்தது. சிங்கள மொழியை அரசகரும மொழி ஆக்குவதாகவும் அவர் தெரிவித்து மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தார். ஆரம்பத்தில் 1944 இல் சிங்களமும் தமிழும் ஆட்சி மொழிகளாக இருத்தல் வேண்டும் எனப் பாராளுமன்றத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதனை நடைமுறைப்படுத்தாது ஐக்கிய தேசியக்கட்சி காலத்தைக் கடத்துகின்றது என்பதால் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா கட்சியை விட்டு விலகினார். 1956 இல் அவரும், சிங்களமும் தமிழும் ஆட்சி மொழிகளாகும் எனத் தன் கொள்கையை அறிவித்திருந்தார். ஆனால், சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றும் வெறியில் இரண்டு தலைவர்களும் தமது கொள்கையை ம்ாற்றி சிங்களமே அரசகரும மொழியாகும் என அறிவித்துக் குத்துக்கரணம் போட்டனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

292



## தேவதை மரம்

தேவலோகத்திலுள்ள கற்பக மரம் அதன்கீழ் யார் நின்று எந்தப் பொருளைக்கேட்டாலும் அதைக் கொடுக்கும் சக்தி பெற்றது. சுனந்தா என்ற தேவகன்னிகை தான் தேவேந்திரனின் மனைவியாகி விட வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

அதனால் அவள் கற்பக மரத்தடியே சென்று கற்பகமரமே! நான் நினைக்கிறபடி நீ என்னைத் தேவேந்திரனின் மனைவியாக்கி விடு என்று வேண்டினாள்.

கற்பகமரமோ என்னால் பொருட்களைத்தான் கொடுக்க முடியும். நீ கேட்டதோ உன் எண்ணப்படி நடக்கவேண்டும் என்னும் வரம். எனக்குவரம் கொடுக்கும் சக்தி இல்லை. மேலும் இப்படி விரும்புவது முறையல்ல. தேவேந்திரனுக்கு ஏற்கனவே தர்மபத்தினி இருக்கிறாள். அவளுக்குப் பதிலாக நீ அவன் மனைவியாக விரும்புவது பெரும்பாவம். எனவே நீ இந்த எண்ணத்தை விட்டுவிடு என்றது.

அதைக்கேட்ட சுனந்தா இதோ பார். உன்னால் உன் விருப்பத்தை நிறைவேற்ற முடியாது என்றால் பேசாமல் இரு. எனக்கு ஒன்றும் நீ உபதேசம் செய்ய வேண்டாம்

### அம்புலிமாமா கதைகள்

என்று கோபத்தோடு கூறி அதன் கொம்புகளில் நான்கை முறித்துப் போட்டாள்.

இதனால் கோபம் கொண்டது கற்பகமரம். நீ ஆத்திரப்பட்டு என் இலைகளுள்ள கொம்புகளை முறித்துவிட்டாய். அதனால் நீ பூலோகத்திற்குப் போய் ஒரு மரத்தில் நீண்டகாலம் இருக்கும்படி சபிக்கிறேன். உனக்கு இனி தேவலோகத்தில் இடமில்லை. போ, பூலோகத்திற்கு! என்று சாபம் கொடுத்தது.

அதைக்கேட்ட சுனந்தா பயந்து போய் எனக்கு இப்படி ஒரு கொடிய தண்டனையா? என் விருப்பத்தைக் கூட உன்னிடம் தெரிவிப்பது ஒரு குற்றமா? என்று கேட்டாள்.

கற்பகமரமும் அது அல்ல நீ செய்த குற்றம். நீ என் கொப்புகளை இலையோடு ஒடித்துப்போட்டாய். ஒரு மரத்தின் கிளைகளையும் கொம்புகளையும் இலைகளையும் ஒடித் ததால் அதற்கு எவ்வளவு வலிக்கும் என்பது உன் போன்றவர்களுக்கு என்ன தெரியும்? நீ ஒரு மரத்திலிருந்து அது மொட்டையாக்கப்படும் போது அது படும் பாட்டை நீ நேரில் காணவேண்டும் என்பதற்காகத் தான் உனக்கு இந்தச் சாபத்தைக் கொடுத்தேன். நீ சிறிது



காலம் பூலோகத்தில் இருந்து விட்டுவா என்றது.

சுனந்தாவும் சரி நான் அங்கு செல்கிறேன். பூலோகத்தில் நான் இருக்கும் போது எனக்கு உள்ள சக்திகள் எல்லாம் அப்படியே இருக்கும் அல்லவா என்று கேட்டாள்.

கற்பகமரமும் ஆகா இருக்கும். ஆனால் அவற்றைப் பிறருக்கு உதவவே பயன்படுத்தவேண்டும் என்பதை நன்கு நினைவில் வைத்துக் கொள் என்று எச்சரித்தது.

சுனந்தாவும் அவ்விதமாக இருப்பதாகக் கூறிவிட்டு தேவலோகத்தில் இருந்து பூலோகத்திற்குச் சென்றாள். அங்கு ஒரு ஊரில் ஒரு வீட்டின் கொல்லைப்புறத்திலுள்ள மரத்திற்குப் போய் அதில் வசிக்கலானாள்.

இந்த வீட்டின் சொந்தக்காரன் கந்தப்பன். தேவலோகத்து சுனந்தா அந்த மரத்திற்கு வந்த அன்றே அவன் அந்த மரத்தின் ஒரு கிளையை ஒடித்தான். அப்போது சுனந்தா தன் கையை ஒடிப்பது போல் உணர்ந்து ஐயோ என்று உரக்கக் கத்தினாள். அதைக்கேட்டு கந்தசாமி அரண்டு போனான்.

தான் ஒடித்த கிளையைக் கீழே போட்டுவிட்டு அவன் மரத்தின் மேல் யாராவது இருக்கிறார்களா என்று உற்றுப்பார்த்தான். யாரும் அவன் கண்களுக்குத் தென்படவில்லை. ஆனால் ஒரு குரல் மட்டும் நான் உனக்கு என்ன கெடுதல் செய்தேன்? என் கிளையை ஏன் ஒடித்தாய்? என்று கேட்டது அவன் காதில் விழுந்தது. அது சுனந்தா கூறியதுதான்.

ஒருமரம் பேசியது கேட்டு கந்தப்பன் ஆச்சரியப்பட்டான். அது கேட்ட கேள்விக்கு வீட்டில் சமைக்க அடுப்பில் வைக்க விறகு இல்லை. கடைக்குப்போய் விறகு வாங்கக் கையில் பணம் இல்லை. அதனால் தான் மரக்கிளையை ஒடித்தேன் என்று அவன் மிகவும் பயந்தாவறே கூறினான்.

அப்போது சுனந்தா நான் தேவலோக தேவதை. இந்தமரம் நீண்ட காலமாக மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது. அதற்காகத்தான் இதற்கு உதவும்படி பகவான் என்னை இங்கே அனுப்பியிருக்கிறார். நான் இன்று முதல் இந்த மரத்தில்தான் வசிக்கப் போகிறேன். இனிமேல் நீ இந்த மரத்திற்கு எவ்விதத்தீங்கும் இழைக்கக் கூடாது. உனக்கு என்ன வேண்டுமானாலும் என்னைக்கேள். நான் கொடுக்கிறேன் என்று கூறி ஒரு அடுப்பை வரவழைத்து அவனுக்கு கொடுத்தாள்.

வீட்டிற்கு அதை எடுத்துப் போன அவன் அதைப்பற்றவைக்க நினைத்தான். உடனே அது தானே எரிந்தது. இனி எரிய வேண்டாம் என எண்ணியதும் அது அணைந்தது. அதன்



சக்தியைக் கண்டு மகிழ்ந்து மூன்று நாட்கள் அதை அவன் பயன்படுத்தினான். நான்காவது நாள் அந்த மரத்திற்குக் கோடரி யுடன் சென்றான்.

அதைக்கேட்ட சுனந்தா ஏன் இப்போ கோடரியோடு வந்திருக்கிறாய்? என்று கேட்டது. அவனும் என் தாயார் உடல் நலம் குன்றி படுத்திருக்கிறாள். வைத்தியம் பார்க்கப் பணம் இல்லை. அதனால் மரத்தை வெட்டி விறகாக்கி விற்றுப் பணம் சம்பாதிக்க நினைத்தேன் என்றான்.

அப்போது சுனந்தா மரத்தை வெட்டாதே! உன் தாயாரை இங்கு அழைத்து வந்து மரத்தின் கீழ் படுக்கவை. இந்த மரத்தின் காற்று இன்று முழுவதும் பட்டால் போதும். அவள் குணமடைந்துவிடுவாள் என்றாள்.

கந்தப்பனும் அவ்வாறே செய்ய அன்று மாலையே அவள் குணம் அடைந்து விட்டாள். இதனால் அந்த வீட்டிலுள்ளவர்கள் அந்த மரத்தைத் தெய்வமாகக் கருதி தினமும் அதற்குப் பூஜை செய்யலானார்கள். அந்த மரம் சக்தி வாய்ந்தது எனத்தெரிந்து அந்த ஊர்க்காரர்கள் எல்லோரும் அதனருகே வந்து தமக்கு வேண்டியதைக் கூறிப் பெற்றுச் சென்றார்கள்.

இவ்வாறு சுனந்தா அந்த மரத்தில் வசித்து யார் எதைக் கேட்டாலும் அதை அவருக்குக் கொடுத்து வந்தாள். அதனால் சிலர் தமக்குப் பயன்படாமலும் பிறரைத் துன்புறுத்தவும் கோரிக்கைகளை அம்மரத்திடம் கேட்டார்கள். சுனந்தா அவற்றை நிறைவேற்றவில்லை. அதனால் அவர்கள் அந்த மரத்திலுள்ள தேவதையின் சக்திகுறைந்து போய் விட்டது என்று பிரசாரம் செய்யலானார்கள்.

அதுகண்டு மனம் புழுங்கி தேவலோகம் போய் கற்பக மரத்திடம் என்னால் மக்களின் நச்சரிப்பு சகிக்கமுடியவில்லை. நான் உதவினால் உதவி பெற்றவர்கள் என்னைப் புகழ்கிறார்கள். ஆனால் சிலர் பிறருக்குக் கெடுதல் செய்ய வரங்கள் கேட்கவே நான் மறுத்தேன். அதனால் கோபம் கொண்டு என்னை ஒரேயடியாகத் தூற்றுகிறார்கள். என்ன செய்வது? என்று கேட்டாள்.

கற்பகமரமும் இப்போது உனக்கு ஒரு மரத்தின் கஷ்டங்கள் என்ன என்பது புரிந்துவிட்டது. உன் பரோபகார சக்தியை உலகின் ஏனைய மரங்களுக்கு எல் லாம் பகிர்ந்து கொடு என்று கூறவே அவளும் அவ்வாறே செய்தாள்.

அன்று முதல் உலகில் எல்லா மரங்களும் மக்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் பயன்பட்டு வரலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசர் மீதான விசாரணையை பிற்போடக் கோரும் சட்டத்தரணிகள்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை விசாரணைகளை இரண்டு மாதங்களுக்கு பிற்போடுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அவசரக் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினமிரவு கூடிய சங்கத்தின் உறுப்பினர்கள் இந்த தீர்மானத்தை ஏகமனதாக எடுத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நான்கு வழக்குகள் முடியும் வரை பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைகளை நடத்தும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு உயர் நீதிமன்றம் கடந்த வார இறுதியில் வேண்டுகோள் விடுத்திருந்தது.

எனினும் அதனை உதாசீனப்படுத்திய நாடாளுமன்ற தெரிவுக்குழு தமது விசாரணையை நடத்தியது.

இந்த நிலையிலேயே சட்டத்தரணிகள் சங்கம் தமது தீர்மானத்தை எடுத்துள்ளது. அத்துடன் பிரதம நீதியரசருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நாடளாவிய ரீதியில் மக்களுக்கு தெளிவுபடுத்தப் போவதாகவும் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வெலிக்கடை மோதல் விவகாரம்; சர்வதேச விசாரணை வேண்டும்

வெலிக்கடை சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணைகள் அவசியம் என சம்பவங்களை நேரில் கண்ட கைதிகள் கோரியுள்ளனர்.

அத்துடன் படையினருக்கும் கைதிகளுக்கும் இடையில் மோதல்கள் முடிந்த பின்னர் படையினர் சிறைக்குள் வந்து 11 பேரை வெளியில் அழைத்து சுட்டுக் கொன்றமை தொடர்பில் சாட்சிகளை வழங்க குறித்த கைதிகள் தயாராகி வருகின்றனர்.

ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை அழைத்து இவ்வாறு சுட்டுக் கொன்றமை மனித உரிமை மீறல் செயல் என்றும் தாமும் தற்போது உயிருக்கு அஞ்சுவதாகவும் சம்பவத்தில் காயமடைந்த கைதி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பிரதம நீதியரசர் பதவியை ஏற்குமாறு யாரும் கோரவில்லை

## முன்னாள் சட்டமா அதிபர் மொஹான்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் பிரதம நீதியரசராக பதவியேற்குமாறு தம்மிடம் யாரும் கேட்கவில்லை என்று முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசர் பதவியை எதிர்பார்த்திருப்பதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்ததால் அவர் தமது மறுப்பை வெளியிட்டுள்ளார்.

நீதித்துறை தொடர்பில் தற்போது அவர் ஜனாதிபதியின் ஆலோசகராக செயற்பட்டு வருகிறார்.

எனவே நாட்டின் அடுத்த பிரதம நீதியரசராக அவரே நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனை மறுத்துள்ள மொஹான் பீரிஸ் சரியான ஒருவர் அந்த பதவிக்கு நியமிக்கப்படுவார் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இனவாதத்தை தூண்டிவிட்டு யுத்தத்தை ஏற்படுத்தி விடாதீர்

## கூட்டமைப்பை பார்த்து கூறினார் கருணா

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை தூக்கியெறிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று 13 ஆவது திருத்தம் பற்றி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பேசுவதாக பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின் போது இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கில் இன்று பாரிய அபிவிருத்தி நடைபெறுகிறது. உங்களை விட வடக்கு கிழக்கு பகுதிக்கு அதிகம் விஜயம் செய்தவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திகழ்கிறார். நீங்கள் கொழும்பில் இருப்பதால் அங்கு நடப்பது ஒன்றும் தெரியாது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை பற்றி பேசுகிறீர்கள். அதனை கொண்டு வந்தது ஐக்கிய தேசியக் கட்சி. எனவே அது பற்றி அக்கட்சியிடம் கேளுங்கள். உங்களுக்கு வரலாறு தெரியாது.

1987 இல் 13 ஆவது திருத்தத்தை தூக்கி வீசிய நீங்கள் இன்று உள்நாட்டில் வெளிநாட்டில் புலம்பெயர் தமிழர்களிடம் 13 ஆவது திருத்தம் பற்றி பேசுகிறீர்கள். நீங்கள் புலம்பெயர் தமிழர்களுக்காக அவர்களின் பணத்திற்காக அரசியல் செய்கிறீர்கள். புலம்பெயர் தமிழர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்ல வேண்டாம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலம்பெயர் தமிழர்களை ஒரு போதும் வெறுக்கவில்லை. அவர் எப்போதும் அவர்களுக்கு இணைந்து செயற்பட அழைப்பு விடுக்கிறார்.

தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கவே பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் மீது விருப்பம் கொண்டவர்கள் என்றால் அதில் கலந்து கொண்டு மக்களின் பிரச்சினை பற்றி பேசுங்கள்.

இந்த நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என பல இனமக்கள் வாழ்கின்றனர். அவர்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டி மீண்டும் நாட்டில் யுத்தம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை பார்த்து முரளிதரன் கருத்து வெளியிட்டுள்ளார். (அ-2)

# ஆளும் கட்சி எம்.பி.க்கள் 30 பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முறையற்ற வகையில் சொத்து சேர்த்தமை தொடர்பில் ஆளும் கட்சியின் முன்னிலை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 30 பேருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த 30 பேருக்கும் எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலஞ்ச மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவின் தலைவர் ஜெகத் பாலபட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 60 பிரதேச சபை உறுப்பினர்களுக்கு எதிராகவும் இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அத்துடன் நாட்டின் அரசியல்வாதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் என்று 400 பேர் மீது இலஞ்ச ஊழல் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இதேவேளை பலர் முறைப்பாடுகளை செய்துள்ளபோதும் பயம் காரணமாக தமது பெயர்களை குறிப்பிடாமை காரணமாக தமது ஆணைக்குழுவினால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




★ 1778-ஹவாயன் தீவுகளில் அமைந்துள்ள மாவுய் தீவில் இறங்கிய முதல் ஐரோப்பியன் கப்டன் ஜேம்ஸ் குக்.

★ 1842-நோட்ரெ டேம் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1922-எகிப்திய மன்னன் துட்டன்காமுன் என்பவனின் கல்லறைக்குள் ஹவார்ட் கார்ட்டர் மற்றும் கார்னாவன் பிரபு ஆகியோர் சென்றனர். 3 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் அதற்குள் சென்ற முதல் மனிதர்கள் இவர்களே.

★ 1941-பிரான்சிடமிருந்து லெபனான் ஒருதலைபட்சமாக விடுதலையைப் பிரகடனப்படுத்தியது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஆறு ஜப்பானிய விமானங்கள் தொலைதொடர்புகள் அற்ற நிலையில் ஜப்பானின் இத்தோகபு குடாவிலிருந்து பேர்ள் துறைமுகத்தை தாக்கியழிக்கப் புறப்பட்டன.

★ 1942- நோர்வேயைச் சேர்ந்த 572 யூதர்கள் ஜேர்மனியர்களினால் போலந்தின் ஒஸ்விட்ச் நகரில் உள்ள யூத முகாமுக்கு நாடு கடத்தப்பட்டனர். இவர்களில் 25 பேரே தப்பினர்.

★ 1949- இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

★ 1950- மக்கள் சீனக் குடியரசின் படைகள் வட கொரியாவினுள் நுழைந்து தென்கொரியா மற்றும் அமெரிக்கப் படைகள் மீது பெரும் தாக்குதலைத் தொடுத்தனர்.

★ 1957- சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவுகளைத் தீயிடும் போராட்டத்தை தந்தை பெரியார் ஆரம்பித்து வைத்தார்.

★ 1965- சகாரா பாலைவனத்தில் பிரான்ஸ் ஆஸ்டெரிக்ஸ் -1 என்ற தனது முதலாவது செய்மதியை விண்ணுக்கு அனுப்பியது.

★ 1983- லண்டன் ஹீத்ரோ விமான நிலைய பொதிகள் பாதுகாப்பு அறையில் இருந்து 26 மில்லியன் பெறுமதியான 6 ஆயிரத்து 800 தங்கப் பாலங்கள் களவாடப்பட்டன.

★ 2001- நேபாளத்தில் மன்னர் ஞயனேந்திரா அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்தார்.

★ 2002-இந்தியாவின் நாகாலாந்து மாநிலத்தில் தனிநாடு கோரும் அமைப்புக்களின் மீதான தடை நீக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1936-லலித் அத்துலத்முதலி, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் (இ.1993)

★ 1939- அப்துல்லா அகமது படாவி, மலேசியப் பிரதமர்

★ 1948-எலிசபெத் பிளர்க்பர்ன், நோபல் பரிசு பெற்றவர்.

★ 1948-வி.கே.பஞ்சமூர்த்தி, ஈழத்தின் நாதஸ்வரக் கலைஞர்

★ 1939- டீனா டர்னர், அமெரிக்க ராக் அன் ரோல் இசைக்கலைஞர்

### இறப்புக்கள்

★ 1930- சேர் பொன்னம்பலம் இராமநாதன், இலங்கையின் தமிழ்த் தலைவர் (பி.1851)

★ 2006- ஜி.வரலட்சுமி, தமிழ்த் திரைப்பட நடிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க அதிபர் ஒபாமா, ஆரோக்கிய மான இரு நாட்டு உறவுகளையும் பேணு வதற்கு முயற்சி செய்கிறார். ஆனால், பல அமெரிக்கர்கள் மனதில் சீனா ஒரு வருங் கால எதிரியாகப் பார்க்கப்படுகிறது. சீனா வால் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லாவிட்டாலும் அமெரிக்கா வின் இராணுவ மேம்பாட்டிற்கும் விரிவாக் கத்திற்கும் சீனாவின் வளர்ச்சியைக் கார ணம் காட்டுகிறார்கள்.

உண்மையில் சீனாவின் பொருளாதார வளர்ச்சிதான் அமெரிக்காவுக்கு அச்சுறுத்த லாக இருக்கிறது. அமெரிக்காவின் பொரு ளாதார வீழ்ச்சிக்குச் சீனாவைக் குறை கூற முடியாது. ஆனால், அமெரிக்கர்கள் அதைத் தான் செய்கிறார்கள். பொருளாதார பலம் பெற்ற சீனா தன்னை இராணுவ ரீதியாக வளர்த்துக் கொள்கிறது. இது தவிர்க்க முடி யாத நிகழ்ச்சி.

சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடை யிலான மிகப் பெரிய முரண்பாடு தென் கொரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக் கப் படைகள் தொடர்பானது. தலைநகர் பீஜிங்கில் இருந்து 400 கி.மீ. தொலைவில் அமெரிக்கப் படைகள் தென்கொரியாவில் முகாமிட்டுள்ளன. அமெரிக்காவும் தென் கொரியாவும் போர் ஒத்திகையில் ஈடுபடும்

மாலை தீவுகளுக்குச் சமாந்தரமாக, அமெ ரிக்க கடற் படை, விமானப்படைத் தளம் டிகோ கார்சியாவுக்கு கிழக்குத் திசையில் செய் செலஸ் தீவுக்கூட்டம் அமைந்துள்ளது.

செய்செலஸ் தீவுகளின் வெளிவிவகார அமைச்சர், சீனாவைத் தமது தீவில் கடற் படைத் தளம் அமைப்பதற்காக தமது அரசு அழைத் ததாக அறிவித்தார். சோமாலிய நாட்டுக் கடற் கொள்ளையர்களின் தாக்குதல்களில் இருந்து தனது நாட்டைக் காப்பாற்றுவதற்கு சீனாவை அழைத்ததாகவும் அவர் சொன்னார்.

**தமிழ் பேசும் 3500 குடிமக்கள் இத் தீவில் வாழ்கின்றார்கள். ஆசிரியர் தொழில் பார்த்த ஒரு யாழ்ப்பாணத் தமிழரின் முயற்சி யால் நவசக்தி விநாயகர் என்ற கோவில் கட்டப்பட்டுள்ளது.**

தமிழ்மொழி, இந்துமத விழிப்பு இப் போது செய்செலஸில் உச்சமடைந்துள்ளது. செய் செலஸின் தமிழர்களை மல்வா என்று அழைப் பார்கள். மலையாளிகளுக்கும் தமிழர்களுக் கும் கூட்டாக இந்தப்பெயர் வழங்கப்படுகிறது.

பாகிஷ்ஸ்தான் கடற்கரையில் சீனா அமைத் துள்ள குவதார் ஆழ்கடல் துறைமுகத்தோடு செய்செலஸ் கடற்படைத் தளத்தை இணைத் துப்பார்க்கும் போது இந்துமாகடலில் சீனா வலுவாகக் காலூன்றியதை அவதானிக்க முடிகிறது. இந்தியா, ஆதிக்கம் செலுத்தும்

சீனா திறமையாகச் செய்யலாம் என்ற அச்சம் இராணுவ வல்லுநர்கள் மத்தியில் நிலவுகின்றது. சீனாவின் கணினி நிபுணர் கள், அமெரிக்க அரச அதிகாரிகள் இராணுவத் தளபதிகளின் தளங்களை அழித்துள்ளதாக குற்றச்சாட்டு ஏற்கனவே எழுந்துள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கா செலவுகளைப் பொருட்படுத்தாது விரிவடை யத் தொடங்கியுள்ளது. இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளு டன் இராணுவ ரீதியாக இணைந்து செயற்பட அமெரிக்கா முன்வந்துள்ளது. இந்தத்திட்டத் திற்கு **இன்ரறோப்ரேபிலிற்றி** என்று பெயரிடப் பட்டுள்ளது.

இந்த நாடுகள் பயன்படுத்தும் இராணுவ உபகரணங்களை, தேவைப்படும்போது மூன்று நாட்டு வீரர்களாலும் அமெரிக்கர்களாலும் இயக்கக் கூடியதாக இருக்கும் என்பது மேற் கூறிய ஆங்கிலச் சொல்லின் அர்த்தம். அமெ ரிக்கப் பாதுகாப்பு ஒழுங்குகளில் இந்தோனே சியா முக்கிய பங்கு எடுக்கத் தொடங்கியுள்ளது.

இந்தோனேசிய வான்பரப்பை பாதுகாப் பதற்கு வேண்டிய ஆயுத தளபாட ஏவுகணை மற்றும் விமானங்களை வழங்க அமெரிக்க இராணுவத் தலைமையகம் பென்டகன் முன் வந்துள்ளது. நவெம்பர் 11இல் அதிபர் ஒபாமா ஆசிய பசுபிக் சுற்றுப்பயணத்தை மேற் கொண்

வுக்கு பதிலடியாக அமெரிக்காவின் இந்தக்கோரிக்கை இடம்பெறுகிறது.

பல நாடுகள் சொந்தம் பாராட்டும் தென் சீனக்கடலின் பரசெல் தீவுகளில் புதியதொரு இராணுவ முகாமை ஆகஸ்ட் 12 இல் சீனா நிறுவியிருந்தது. இதற்கு அமெரிக்கா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. ஆனால், சீன வெளி விவகார அமைச்சகம் அதை ஏற்க மறுத்துள்ளது.

**பசுபிக் மாகடலில் அமெரிக்கா இராணுவ மற்றும் கடற்படைப் பிரசன்னத்தை அமெ ரிக்காவின் நீண்டநாள் நட்பு நாடான அவுஸ்திரேலியா வரவேற்றுள்ளது. வடக்கு அவுஸ்திரேலியாவின் டார்வின் நகருக்கு அருகாமையில் 2500 அமெரிக்கா வீரர் கள் அடங்கிய இராணுமுகாம் அமைக்க அவுஸ்திரேலியா ஒப்புதல் வழங்கியுள்ளது.**

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தன்னை வலுப்படுத்த அமெரிக்கா எடுக்கும் நட வடிக்கைகள் . சீனாவைக் குறிவைத்து நடத்தப்படுகிறது. சீனாவுடன் பெருமளவு வர்த்தக உறவை அமெரிக்காவும் அவுஸ்தி ரேலியாவும் வைத்திருக்கின்றன.

அமெரிக்காவும் சீனாவும் பொருளியல் துறையில் ஒட்டிப்பிறந்த இரட்டையர்போல் அமைந்துள்ளன. அமெரிக்கச் சந்தையும்

# சீன-அமெரிக்க முரண்பாடுகள்... இரண்டாவது பனிப்போர் வரலாம்

போது சீனா பதற்றம் அடைகிறது.

தாய்வானுக்கு அமெரிக்கா, 2010 ஆம் ஆண்டு 6.7 பில்லியன் டொலர் பெறுமதி யான ஆயுத தளபாடங்களை விற்பனை செய்ய ஒத்துக்கொண்டது. இரண்டு கடல் கண்ணிகளை வேட்டையாடும் ஒஸ்பிறே (osprey) ரகக் கப்பல்கள், 60 பிளாக்ஹோக் (Black Hawk) இராணுவ உலங்கு வானூர்த் திகள், தரையிலிருந்து விண்ணுக்கு ஏவும் (Surface to Air Missiles) ஏவுகணைகள் இதிலடங்கும்.



தாய்வானைத் தனக்குரிய சொத்தாகச் சீனா பார்க்கிறது. அதனுடைய வெளியுறவுக் கொள்கையில் ஒரே சீனா (one china) அதாவது சீனாவும் தாய்வானும் பிரிக்க முடி யாத ஒருபகுதி என்ற அம்சம் முக்கியமா னது. அமெரிக்க உதவியோடு தாய்வான் விடுதலைப் போர் நடத்தலாம் என்ற அச்சம் சீனாவுக்கு நிரந்தரமாக உண்டு.

தாய்வானுக்கு, ஆயுத விற்பனையைத் தொடர்ந்து, திபெத்தின் முன்னாள் ஆன் மீகத் தலைவர் தலாய்லாமாவை அமெரிக்க அரசு கௌரவ விருந்தினராக அழைத்துள் ளது. அதிபர் ஒபாமாவின் இந்த அழைப் பைச் சீனா வன்மையாகக் கண்டித்துள்ளது. 1950 ஆம் ஆண்டு தொடக்கம் திபெத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சீனா மாற்று உரிமைக் கோரிக்கைகளை ஏற்கத் தயாரில்லை.

**திபெத்தில் சீன எதிர்ப்பை இந்தியா வுடன் இணைந்து அமெரிக்கா ஊக்கு விப்பதாக சீனா அஞ்சுகிறது. திபெத்தி யர்களின் நாடுகடந்த அரசை அமைப்ப தற்கு இந்தியா அளித்த அனுமதி இந்த இரு நாடுகளின் நல்லுறவைப்பாதிக் கின்றது.** மனித உரிமை பேணுகை என்று காரணம் காட்டி தனது உள்நாட்டு விவகாரங் களில் அமெரிக்கா தலையிடுவதாகவும் சீனா ஆதங்கப்படுகிறது.

தென் பசுபிக், இந்து மாகடல் பிராந்தி யங்களில் அமெரிக்கா-சீனா போட்டா போட்டி நடப்பது உண்மையே. 2011 டிசெம்பர் 12 ஆம் நாள் மேற்கு இந்து மாகடல் தீவு- செய்செலஸில் தனது கடற் படைத் தளத்தை அமைப்பதாக சீன பாதுகாப்பு அமைச்சு அறிக்கை வெளியிட்டது. செய்செலஸ் பிரிட் டிஷ் கொலனியாக இருந்து 1976 ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.

செய்செலஸ், 115 தீவுகளைக்கொண்டது. ஆபிரிக்காவின் கிழக்குக் கரையிலிருந்து 1500 கி.மீ. (932மைல்) தொலைவில்,

மாலை தீவில் சீனா, தனது தூதரகத்தை திறந்துள்ளது.

இலங்கையின் அம்பாந்தோட்டை துறை முகம் வங்கதேசத்தின் சித்தாகொங் துறை முகம், மியான்மரின் கொகோஸ்திவுத் துறை முகம் என்பன சீனாவின் இந்தமாகடல் பிர சன்னத்தை மேலும் உறுதி செய்கின்றன. நிதி நெருக்கடிகள் அமெரிகாவின் ஆசிய பசுபிக் பிரசன்னத்திற்கு தடங்கலாக இருக்கமாட்டாது என்று அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அதி காரிகள் தெரிவிக்கின்றனர்.

சீனாவின் கணினித் தொழில்நுட்ப வளர்ச்சி அமெரிக்க இராணுவத்திற்கும் கடற்படைக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது. கடற் கலங்களுக்கு எதிரான சீன ஏவுகணைகள்

**நன்றி:- இணையம்**

அமெரிக்க விமானம் தாங்கிகளுக்கும் பிற போர்க்கப்பல்களுக்கும் ஆசிய பசுபிக்கடலில் சஞ்சரிக்கும் சுதந்திரத்தை மட்டுப்படுத்தப் போவதாக நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

**எதிர்காலத்தில் போர்முறை உத்திகளும் ஆயுதப்பாவனையும் கணனி அடிப்படை யில் இயங்கவிருப்பதால், பிறநாடுகளில் கணனித் தொகுதிகளுக்குள் புகுந்து** அழிவுகளையும் திசை திருப்பல்களையும்

டார். இந்தோனேசிய அதிபரிடம் வான்படை, கடற்படைக்குரிய அமெரிக்க படைக் கலங்களை வழங்கும் உறுதியை ஒபாமா அளித்தார்.

பசுபிக் கடற்தீவு குவாமில் கேந்திர இராணுவ மையத்தை அமைப்பதில் அமெரிக்கா ஈடுபடு கிறது. கடற்கரைப் பாதுகாப்புக் கப்பல்கள் இங்கு நிறுத்தப்படவுள்ளன. இந்தக் கப்பல் கள் சிங்கப்பூரின் பாதுகாப்பிற்கும் உதவும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதேசமயத் தில் சில பசுபிக் தீவுகளுக்கு குறிப்பாக பிஜி தீவகளுக்கு சீனா பெருமளவு நிதியுதவியை வழங்கிவருகின்றது.

தென்கிழக்காசியாவில் சீனாவுக்கு போட்டி யாக அமெரிக்கா தனது பிரசன்னத்தை விரிவு படுத்துகின்றது. தெற்காசிய நாடு- இந்தியா வின் பாதுகாப்பையும் அமெரிக்கா உறுதிசெய்ய வுள்ளது. இந்தியாவை அச்சுறுத்தும் வகை யில் இலங்கையில் சீனா, இராணுவ கடற்தளங் களை அமைப்பதை தடுப்பதற்கும் அமெரிக்கா நடவடிக்கை எடுக்கத்தொடங்கியுள்ளது.

**கிழக்கு-மேற்கு கடற்பாதை தென் சீனக் கடலூடாகச் செல்வதால், இந்தக் கடல் இந்து மாகடல்போல் பொதுப்பாவனைக்கு திறந்து விடவேண்டும் என்று அமெரிக்கா அழுத்திக் கூறுகிறது. தென் சீனக் கடல் முழுவதற் கும் ஏகபோக உரிமைகோரும் சீனா**

முதலீடும் சீனாவுக்குத் தேவைப்படுகின்றன. அதேசமயம் சீனாவின் நிதிப்பங்களிப்பு அமெ ரிக்க நிதி நிலவரத்தை ஸ்திரமாக வைத்திருக் கிறது. அமெரிக்காவின் வைப்பகம் என்று சீனாவை அழைப்பதில் தவறில்லை.

இரண்டாவது பனிப்போர் தொடங்கிவிட்ட தாக எண்ணும் ஆய்வாளர்கள் ஒரு முக்கிய விடயத்தை மறந்துவிட்டனர். சோவியத் ஒன்றி யம் அணுஆயுதம் தொடக்கம் விண்வெளி தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கினாலும் அதனிடம் பெருந்தொகை நிதி ஆதாரம் இருக்கவில்லை.

பொருளாதார ரீதியாக அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் பின்னிப்பிணைந் திருக்கவில்லை. ஆனால், சீன அமெரிக்க உறவில் இது தான் முக்கிய அம்சம். வரலாற் றில் வல்லரசுகள் நேரடியாக மோதும் வாய்ப்பு இல்லா விட்டாலும் அது, நடக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் நேரடியாக மோதவில்லை ஆனால், எதிர் பாராத விதமாக சோவியத் ஒன்றியம் 1991 இல் தானாக உடைந்துவிட்டது. சீனாவும் அமெரிக்காவும் ஒன்றோடு ஒன்று மோதா மல் ஒன்று மாத்திரம் உடையும் வாய்ப்பு இருக்கிறது. அது எதுவாக இருக்கும் என்பது தான் கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா விஜயத்தை கைவிட்டார் ஜனாதிபதி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மலேசியாவிற்கான விஜயத்தை தவிர்த்துக் கொண்டுள்ளதாக இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலக ஊடக பிரிவு தகவலைத் தெரியப்படுத்தியுள்ளது.

தவிர்க்க முடியாத காரணம் காரணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மலேசியாவிற்கான விஜயத்தை மேற்கொள்ளமாட்டார் என மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை மலேசியாவில் இஸ்லாமிய பொருளாதார மன்ற ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி செல்லவிருந்தார்.

இந்நிலையில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலைப் போரை நடத்திய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழர்கள் வாழும் மலேசியாவில் கால் பதிக்க மலேசிய அரசு அனுமதிக்கக் கூடாது என்று சிலாங்கூர் நடவடிக்கை குழு தலைமையில் கிள்ளானில் ஒன்று கூடிய அரசு சார்பற்ற இயக்கங்கள் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் நீதிக்கு கல்லடி வீழ்ந்தது

## நினைவுபடுத்தினார் அமைச்சர் வாசுதேவ

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி காலத்தில் நீதி சேவைக்கு விழுந்த பாரிய கல்லடிகள் நினைவில் நிற்பதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருக்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியின் காலத்தில் நீதிமன்றம் தொடர்பான வரலாறு குறித்து நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விளக்கமளித்த போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், எதிர்க்கட்சியின் முன்னாள் தலைவர்கள் நீதிசேவைக்கு பெரும் சேவையாற்றியிருப்பதாக கிண்டலாக தெரிவித்தார்.

நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு அமையவே தற்போதைய அரசாங்கம் செயற்படுவதாக அவர் கூறினார். அராஜகமாக செயற்பட வேண்டுமானால் வேறு காரணங்களை காட்டி அதற்கு புறம்பாகவே சட்டத்திற்கு வெளியில் செல்ல வேண்டும்.

பிரதம நீதியரசரும் தன் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விசாரணையை மேற்கொள்வது யார் என்பது குறித்து அவரே தீர்மானித்துக் கொண்டு வந்துள்ளார். அதுவும் அவருக்கு இருக்கின்ற சட்டரீதியான உரிமையாகும். அந்த செயற்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆனால் தற்போது எதிர்க்கட்சியினர் பக்கசார்பற்ற முறைமை தொடர்பில் வலியுறுத்துகிறார்கள். அதுமட்டுமன்றி நீதிமன்றத்துக்குரிய நம்பிக்கைத் தன்மை, உயர்தன்மை என்பன குறித்து பேசுகிறார்கள்.

என்மீதுள்ள வழக்கு தொடர்பாக விசாரிப்பதற்கு நானே நீதிபதிகளை தெரிவு செய்து கொண்டு வரமுடியும் என்று தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றம் என்ற ஒரு கட்டமைப்பின் ஊடாக முறையான தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என்று சுட்டிக்காட்டினார். (அ-2)

# உமியை பயன்படுத்தி மீள் சக்தி உற்பத்தி

## ஜப்பான் தூதுக்குழு கவனம்

(கொழும்பு)

இலங்கையில் உமியினைப் பயன்படுத்தி மீள் சக்தி உற்பத்தியினை மேற்கொள்வது தொடர்பில் ஆர்வமாகவுள்ளதாக ஜப்பான் நாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இங்கு வருகை தந்துள்ள ஜப்பான் முதலீட்டாளர்கள் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீனை சந்தித்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

நெல்லினை அரிசியாக மாற்றும் போது அதிலிருந்து வெளியாகும் உமியினை கொண்டு மீள் சக்தி உற்பத்தியினை செய்வது குறித்து தாங்கள் தமது கவனத்தை செலுத்தவுள்ளதாகவும் அதன் மூலம் சூழலுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களையும் தடுக்க முடியும் என்றும் ஜப்பானிய தூதுக்குழுவினர் அமைச்சரிடத்தில் சுட்டிக்காட்டினர்.

ஜப்பான் நாட்டில் தற்போது இந்த முறை பயன்படுத்தப்படுவதாகவும் ஐரோப்பிய சந்தையில் தமது உற்பத்திகள் கவரப்பட்டு வருவதாகவும் முதலீட்டுக் குழுவினர் அமைச்சர் றிசாத் பதியுதீனிடத்தில் எடுத்துரைத்தனர்.

குறிப்பாக இலங்கையில் இவ்வுற்பத்திக்கான மூலப்பொருள் காணப்படுவதாகவும் அதனை இங்கு உற்பத்தி செய்வது குறித்து தாங்கள் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் எரிபொருள் மற்றும் மின்சாரம் என்பன்வற்றின் செலவீனங்களை குறைக்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (அ-2)

# தமிழக கூடங்குளத்தால் இலங்கைக்கு பாதிப்பு

## எச்சரிக்கிறது அணுசக்தி அதிகாரசபை

(கொழும்பு)

தமிழகத்தில் அமைக்கப்படும் கூடங்குளம் அணு மின்னுற்பத்தி நிலையத்தினால் இலங்கையர்களுக்கு நீண்டகால பாதிப்புக்கள் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அணு சக்தி அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் அனில் ரஞ்சித்தை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இதில் இருந்து ஏற்படுகின்ற கசிவின் காரணமாக புற்றுநோய் போன்ற நீண்ட கால நோய்கள் ஏற்படலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணுக்கசிவுகள் உணவுப்பொருட்களில் பரவுவதால் இந்த நிலை ஏற்படலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சமாதான பேச்சுக்காக புலிகள் கதிர்காமரை ஏற்றுக் கொள்ளார்கள்

## ரணில் தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவையோ அல்லது முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரையோ தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது கதிர்காமரையோ அல்லது சந்திரிக்காவையோ புலிகள் ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்தமாட்டார்கள் என ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டாடுடன் நடைபெற்ற சந்திப்பின் போது ரணில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ரீதியில் நன்மை அடைய முடியும் என்று கருதியே மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு தேர்தலில் ஆதரவளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். சந்திரிக்கா அரசாங்கம் தற்போதைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க சாத்தியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி. கட்சி கூட்டணி வகிப்பதனால் உடனடியாக பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்புவது சாத்தியமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# 13 ஆவது திருத்தத்தில் தேவையற்ற விடயங்களை நீக்க வேண்டும்

## சம்பிக்க, டிலான் வலியுறுத்தல்

13 ஆம் அரசியல் திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வினை வழங்கும் பொருட்டு சர்வதேசத்தின் அழுத்தங்கள் அதிகரிக்கவிருப்பதாக மின்சாரத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.


மதுகமவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு உரை நிகழ்த்துக்கையில்,


இந்த சூழ்ச்சி குறித்து அறிந்திருந்தும் மௌனமாக இருந்தால் அடுத்த வருடம் மார்ச் மாதம் சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகார பகிர்வுகளை அமுலாக்க வேண்டும் என்ற கட்டாய அழுத்தங்களை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டத்தில் தேவையான விடயங்களை சேர்த்தும் தேவையற்ற விடயங்களை நீக்கியுமே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுவதாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சிலர் 13 பிளஸ் என்கிறார்கள் சிலர் 13 மைனஸ் என்கிறார்கள். ஆனால் உண்மையில் 13 மைனஸ் வன் பிளஸ் டூ என்ற அடிப்படையிலான தீர்வே அவசியப்படுகிறது.

தேவையற்ற விடயங்களை 13 ஆம் திருத்தச் சட்டத்தில் இருந்து நீக்கி தேவையான விடயங்களை உள்ளடக்கிய தீர்வின் ஊடாகவே பயணிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)





யா/இராமநாதன் கல்லூரியில் அண்மையில் வாசிப்பு மாத நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பொறுப்பாசிரியர்கள் நிற்பதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் ப.கணேஷன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரம் 1 மாணவர்கள் இணைப்பு; தினமும் 250 முறைப்பாடுகள்

## கல்வி அமைச்சு தகவல்

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக நாளாந்தம் சுமார் 250 முறைப்பாடுகள் கிடைப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரத்ன தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இதில் அநேகமான முறைப்பாடுகள் கடிதங்கள் மூலம் கிடைக்கின்றன.

இந்த முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக மூன்று விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பதிவாகியுள்ள முறைப்பாடுகள் குறித்து மாகாண கல்வி திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

அடுத்த வருடத்திற்கான முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

அத்துடன் முதலாம் தரத்தில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் மாணவர்களை உரிய ஆவணங்களுடன் அழைத்து வருமாறு பெற்றோர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைகளில் தெரிவு செய்யப்படாத மாணவர்கள் தமது மேன்முறையீடுகளை தாக்கல் செய்ய முடியும் எனவும் இது குறித்து விசாரணைகள் நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பி.பி.சி. ஊடகவியலாளர்களை விசாரிக்க கோருகிறார் ரணில்

பி.பி.சி. ஊடகவியலாளர்களின் நடவடிக்கை கள் குறித்து விசாரணை நடத்துமாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க அந்த ஊடக நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பி.பி.சி. ஊடகத்திற்காக பணியாற்றி வரும் சந்தன கீர்த்தி பண்டார மற்றும் எல்மோ பெர்னாண்டோ ஆகியோரின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துமாறு ரணில் விக்ரமசிங்க பி.பி.சியின் தலைவர் கிறிஸ்டோபர் பெட்டன் பிரபுவிடம் கோரியுள்ளார்.

குறித்த இரண்டு ஊடகவியலாளர்களும் பி.பி.சி யின் ஊடாக ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் 12 இலட்சம் ரூபா பெறுமதியான வட்டியில்லா வாகன கடனுக்காக விண்ணப்பித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வாகன கொள்வனவிற்காக வட்டித் தொகை மக்களின் வரிப்பணத்தில் ஈடு செய்யப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடகவியலாளர்களின் இந்த நடவடிக்கை ஊடக ஒழுக்க விதிகளுக்கு புறம்பானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகனங்களையும் லப்டொப் கணனிகளையும் பெற்றுக் கொண்ட சில ஊடகவியலாளர்கள் தமக்கு எதிராக செய்திகளை வெளியிட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# சுப்ரீம் சட் செய்மதியில் இலங்கையின் தேசியக்கொடி பறக்கவிடப்படுமா?

## றுவன் எம்.பி.கேள்வி

சீனாவில் இருந்து ஏவப்படவுள்ளதாக கூறப்படும் செய்மதியான சுப்ரீம் சட் 1 இல் இலங்கையின் தேசியக்கொடி பறக்கவிடப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் றுவன் விஜயவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் அவர் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். இது குறித்த கோரிக்கையை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சும் தேசிய தொடர்பாடல் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவும் விடுத்திருந்தன.

இலங்கையர் என்ற ரீதியில் செய்மதி ஒன்று அனுப்பப்படுவதை தாம் வரவேற்பதாக குறிப்பிட்ட அவர் எனினும் அது அனுப்பப்படும் விதம் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் இலங்கையின் தேசியக் கொடியை குறித்த செய்மதியில் பறக்கவிட அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிய வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையின் தனியார் நிறுவனமான சுப்ரீம் சட் குறித்த செய்மதியில் இருந்து தொடர்புகளை பெற்றுக்கொள்ள 350 மில்லியன் டொலர்களை முதலீடு செய்ய விருந்ததாகவும் விஜயவர்த்தன தகவல் வெளியிட்டுள்ளார். (அ-2)

# பெயர்ப்பலகைகளை காட்சிப்படுத்தாத அரச நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

## ஆணைக்குழு அறிவிப்பு

அரச கரும மொழிகள் கொள்கைக்கு அமைய தமது பெயர் பலகைகளை காட்சிப்படுத்தாத அரச நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு அரச கரும மொழிகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர்.ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தகைய நிறுவனங்கள் தொடர்பாக தற்போது தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

அரச கரும மொழிகளுக்கு அமைய பெயர் பலகைகளை காட்சிப்படுத்த தவறிய சுமார் 75 அரச நிறுவனங்கள் தொடர்பாக தற்போது தகவல் கிடைத்துள்ளது.

பெயர் மற்றும் அறிவித்தல் பலகைகள் மூன்று மொழிகளிலும் காணப்பட வேண்டும் என்பது குறித்து நாட்டிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது குழுவினர் இது குறித்து ஆராய்ந்து தமக்கு அறிவிப்பதாகவும் அதனை தொடர்ந்து நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# நீதிமன்றுக்கும் சபைக்கும் இடையில் முறுகல் முற்றிவிட்டதா?

## கேள்வி எழுப்புகிறார் திஸ்ஸ எம்.பி.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பிலான வழக்குகள் முடியும் வரை தெரிவுக்குழு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு விடுக்கப்பட்ட உயர்நீதிமன்ற கோரிக்கையை நாடாளுமன்ற தெரிவுக்குழு நிராகரித்தமை கண்டிக்கப்பட்டுள்ளது.

இது நாடாளுமன்றத்துக்கும் நீதித் துறைக்கும் இடையில் முறுகல்கள் தீவிரமாகியுள்ளமையை காட்டுகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுர பண்டாரநாயக்க சபாநாயகராக இருந்தபோது நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு உத்தரவு பிறப்பிக்க முடியாது என்பதை உறுதிபட தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையிலேயே கடந்த வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றமும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் கோரிக்கையை விடுத்திருந்தது. எனினும் அதனை நாடாளுமன்ற தெரிவுக்குழு புறக்கணித்தமையானது வேண்டத்தகாத செயல்களுக்கு வழிவகுக்கும் என்று திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் நாடாளுமன்ற தெரிவுக்குழு உயர்நீதிமன்றத்தில் நட்பு ரீதியான இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கலாம் என்று கருத்துரைத்துள்ளனர். (அ-2)

# நளினி-முருகன் சிறையில் சந்திப்பு


(கொழும்பு)

வேலூர் பெண்கள் தனிச்சிறையில் ராஜீவ் கொலை வழக்கு தொடர்பில் தண்டனை அனுபவித்து வரும் நளினி-முருகன் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை பெற்ற முருகன் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதே வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற நளினி வேலூர் பெண்கள் தனிச்சிறையில் உள்ளார்.

கணவன்-மனைவியான இவர்கள் இருவரும் 15 நாட்களுக்கு ஒருமுறை சனிக்கிழமைகளில் அரைமணி நேரம் சந்தித்துப் பேச உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு ஆண்கள் மத்திய சிறையிலிருந்து முருகன் பலத்த பாதுகாப்புடன் பெண்கள் தனிச்சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். சுமார் அரை மணி நேர சந்திப்புக்கு பின்னர் மீண் டும் பொலிஸ் பாதுகாப்புடன் ஆண்கள் மத்திய சிறையில் முருகன் அடைக்கப்பட்டார். (அ-2




சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜயந்தி தின ஊர்வலமும் மாநாடும் அண்மையில் ஏழாலையில் நடைபெற்றது. யா/ஏழாலை மகா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமான ஊர்வல நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயத்தில் நடைபெற்ற மகாநாட்டில் வித்தியாலய அதிபர் தேவகி புவனேஸ்வரன் வரவேற்புரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

## 26.11.2012

## ஆலய பரிபாலன சபைத்தலைவரின் வாழ்த்து




1940 ஆம் ஆண்டு அயலவர்கள், வழிப் போக்கர்களினால் கட்டிக் கல் வைத்து வழிபாடு செய்யப்பட்டு இன்று பல மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் திரு நெல்வேலி தெற்கு பரமேஸ்வராச்சந்தி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம். இவ் ஆலயம் 1940 ஆம் ஆண்டு க்கு முன்பு இங்குள்ள மக்கள் மற்றும் சந்தைக்கு செல்பவர்கள், வழிப்போக்கர்கள் போன்றவர்கள் இப் பகுதியில் அமைந்துள்ள தொட்டி கிணற்றில் நீர் அருந்திவிட்டு தினந் தோறும் செல்வது வழக்கம். அவ்வாறு தினந்தோறும் அதிகளவான மக்கள் தொட்டி கிணற்றினை பயன்படுத்தி அசிங்க வேலைகள் செய்வதை இங்குள்ள மக்கள் கவனத்தில் கொண்டு ஓர் பிள்ள்ளயார் உருவம் போன்ற கல் வைத்து வழிபட ஆரம்பித்தனர்.

தினந்தோறும் பூ, பால் கொண்டு சிறப்பாக பூஜைகள் செய்து வந்தனர். பிள்ளையார் கனவில் பலருக்கு காட்சி கொடுத்து அருள் வழங்கினார்.

இவ்வாறாக பக்தர்களுக்கு அருள் பாலித்த ஸ்ரீ வீரகத்தி விநாயகர் பெருமான் கும்பாபிஷேக நன்நாளில் மக்கள் குறை தீர்க்க வேண்டி அமைகின்றேன்.

தலைவர் க.நகுனகுலசிங்கம்



## ஆசியுரை






யாழ். திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வரா சந்தி அருள்மிகு வீரகத்தி விநாயகப்பெருமானுக்கு ஆலய பரிபாலன சபையினரின் விடா முயற்சியும் அவர்களின் ஊக்கத்திலும் சிறிய ஆலயத்தை பெரியதாக உருவாக்கி துவிதள ராஜகோபுரம், பஞ்சமுகவிநாயகர் புதிதாக அமைத்து மற்றும் ஆலய கூரை வேலைகள், பரிவாரமூர்த்திகள், மணிக்கூட்டு கோபுரம், வைரவர், சந்தானகோபாலர், முருகன், சண்டேஸ்வரர் மூலமூர்த்தி ஆலயங்கள் திருத்தி, வர்ணம் தீட்டி, அழகுபடுத்தி, பாலஸ்தாபனம் செய்து கூடிய கெதியில் இன்று குறிப்பிட்ட திகதியில், சுபநேரத்தில் மஹா கும்பாபி ஷேகம் செய்ய ஊர்மக்கள், இளைஞர்கள் உதவியுடன் கும்பாபிஷேகம் செய்து ஆலய பரிபாலன சபையினரும் அடியார்களும் விநாயகரின் அருளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி ஆசி வழங்குகிறோம்.

சிவஸ்ரீ பா. பாலஸ்ரீஸ்கந்தராஜ சிவாச்சாரியார் (கும்பாபிஷேக பிரதம குரு)

பிரதிஷ்டா பிரதமகுரு கிரியாக்கிரமஜோதி, சிவாகம பூஷணம், சோதிடசிகாமணி சிவ ஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார்

## வீரகத்தி விநாயகனைத் தொடி ஆத்மபலம் பெருகும்



எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயங்களைப் புதுக்கும் ஆராதனைகளின் வழி அனைத்து மனங்களும் மேன்மைப்படுகின்றன. கூட்டு வாழ்வுக்கான விழுமியங்கள் உறுதி பெறுகின்றன.

இந்தவகையில் கல்வி– கலை ஞானம்– தொழில் வளப் பெருக்குடன் நிமிர்ந்துள்ள திருநெல்வேலியின் ஆன்மீக அழகுக்கு அழகு சேர்ப்பதாய் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு அழகுக் கோயிலும் கோபுரமும் அமையப் பெறும் இந்நாள் மேன்மையானது.குட்டிப் பிள்ளையாராக வழித்துணையாய் வீதிமருங்கில் வீற்றிருந்த பெருமானுக்கு அழகுக் கோயிலெடுத்து அத்தனைபேரும் அவன் அருளுக்கும் சமுதாயத்தின் நன்றிக்கும் பாத்திரமானவர்கள்.

விக்கினங்களுக்குள் நலிந்த மக்கள் மீளவும் தங்கள் வாழ்வினைக் கட்டமைக்கும் வேளை பெரிதும் வேண்டப்படும் ஆத்மபலத்தினை வீரகத்தி விநாயகர் வசமாக்குவார்.

*ஆன்மாவான கணபதியின்*
*அருளுண்டு அச்சமில்லையே*
*(பாரதி*

பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர், சமூகவியல் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## ஆலய வரலாறு

திருநெல்வேலிக் கிராமம் பல்வேறு சிறப்பு அம்சங்களை கொண்டதாகும். தெய்வீக அருள் விளங்கும் ஆலயங்களும் ஞானிகளும் சித்தர்களும் வாழ்ந்த பகுதியாகும். இக்கிராமத்தின் மையப் பகுதியாக விளங் கும் பரமேஸ்வராச்சந்தியின் வடமேற்கே பல்கலைக் கழகமும் பரமேஸ்வரன் ஆலயமும் கிழக்கே சிவன், அம்மன் தேவஸ்தானங்களும் மேற்கே வேதாந்த ஆச் சிரமமும் தெற்கே ஆலடி ஞானவைரவர் ஆலயமும் அமையப் பெற்ற பிரதேசமாகும். இப்பகுதியிலே பசு வதைக்கு அஞ்சித் தமிழகம் சென்ற சுவாமி ஞானப் பிரகாசர் வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகையால் இப்பகுதி வாழ்மக்கள் குருவருள் திருவருள் இரண்டும் கைவரப் பெற்றவர்கள்.

விநாயகப்பெருமான் ஆலமரத்தடியிலும் அரசமரத்தடியிலும் வீற்றிருப்பார். அதற்கு ஏற்றாற்போல் அக்காலத்தில் இப்பகுதியில் ஆல, அரச, வில்வ, நெல்லிமரங்கள் சூழக் காணப்பட்டது. வள்ளல் துரையப்பா அவர்களால் கிணறும் நீர்த் தொட்டியும் சுமைதாங்கியும் ஆவுரஞ்சிக் கல்லும் நிறுவப் பெற்றிருந்த இடமாகும்.

இவ்வாறு இயற்கை எழில் பொங்கும் இப் பகுதியில் கந்தர் தியாகர் என்பவருடைய காணியின் மேற்குப் புறத்தே வாழ்ந்து வந்தவர் பூநகரி தங்கச்சி என்று அழைக்கப்படும் சின்னத் தங்கச்சி அவர்கள் விந்ாயகப் பெருமான் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர். இவர் கந்தர் தியாகர் என்பவருடைய காணி யில் இற்றைக்கு சுமார் 90 வருடங்களுக்கு முன்பு விநா யகப் பெரு மானுக்கு விக்கிரகம் வைத்து வழிபட்டு வந்தார்.

இவர் சைவ ஆசார சீலராக தினந்தோறும் விளக்கேற்றி பக்தி நெறியில் வழிபாடு செய்து வந்தார். இவர் இறைபதம் அடை யும் வரையும் அவரே இவ்வாலயத்தின் வழிபாடு, பராமரிப் பாளராகக் காணப்பட்டார். இவருடைய மறைவிற்குப்பின் இ.தம்பையா என்பவர் மிகவும் பக்தியோடும் ஆசாரத்துடனும் ஆலயத்தைப் பராமரித்து வந்தார். இப்பகுதிவாழ் மக்கள் திருவாளர் தம்பையா மற்றும் இளைஞர்களும் ஒன்றுகூடி ஆலயத்தின் வளர்ச்சிக்காக சைவமுன்னேற்றக்கழகம் ஒன்றை ஆரம்பித்தனர்.

1965ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சைவ முன்னேற்றக்கழகத்தினர் ஆலயத்தின் நித்திய பூசைகள், வழி பாடுகள் நடை பெறுவதற்கு வழிவகுத்தனர். சிறு கொட்டில், கொட்டகையாக மாற்றமடைந்து ஒழுங்கு முறையாக பூசைகளும் நடை பெற்றன. இவ்வாறு காலம் தவறாமல் பூசை நடைபெற்றதுடன் ஆலய மும் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இவ்வாறு சைவமுன்னேற்றக்கழகத்தின் பராமள–ரிப் பில் இயங்கிவந்த பரமேஸ்வராச்சந்தி ஸ்ரீவீரகத்தி விநா யகர் ஆலயத்திற்கு ஒரு பரிபாலனசபை வேண் டும் என்ற கருத்தை அப்போது உதவி அரசாங்க அதிபரா கவும் பின்னர் அரசாங்க அதிபராகவும் கடமையாற்றிய திருவாளர் கந்தையா சண்முக நாதன் அவர்கள் முன்வைத்தார்.

அவரின் ஆலோசனைப்படி திருநெல்வேலி தெற்கு பரமேஸ் வராச்சந்தி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆல யத்திற்கு ஒரு பரிபாலன சபை அமைக்கப்பட்டது.

இவ்வாலயத்தில் நித்தியபூசையுடன் விநாயகப் பெருமானுக்கு உகந்த பூசைகளான மாதந்தோறும் வரும் சதுர்த்தி, ஆவணிச் சதுர்த்தி, பிள்ளையார் கதை மற்றும் நவராத்திரி பூசை என்பனவும் மிகவும் சிறப்பாக நடை பெறுகின்றன. மேலும் தைத்திங்களில் வரும் –தைப்பூசத் திருநாளில் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 15 நாட்கள் கொடி யேற்றத்துடன் கூடிய மகோற்சவம் நடைபெறுகின்றது. ளதிருவாளர் செந்தில்நந்தன் பிரதேச செயலாளர் வேண்டு கோளுக்கமைய (கலாசார உத்தியோகத்தர் ஆலோசனை, பிரதேச செயலாளர் வழிகாட்டல்) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் ஆலயத்திற்கென்று புதிய முகாமைத் திட்டம் (யாப்பு) அமைக்கப் பெற்று 11 பேர் அடங்கிய பரிபாலனசபை யினர் ஆலய நித்திய, நைமித்திய, மகோற்சவ பூசைகளுடன் ஆலயத்தையும் நன்கு பராமரித்து வருகின்றனர். இன்று பரமேஸ்வராச்சந்தியில் அருள் வழங்கும் ஆலயமாக ஸ்ரீ வீரகத்திவிநாயகர் ஆலயம் அழகும் பொலிவும் பெற்று விளங்குகின்றது.

மலரமைப்பு:-S.Gnaneswaran
Allianz Insurance
Training Agency Leader


Sriram Hardware
Palaly Road
Kondavil Junction.
T.P.0779898541

Eeswaa Digital Press
Parameshwara Junction,
Thirunelvely, Jaffna.
E mail:- info@eeswaa.com
edpjaffna@gmail.com
edpjaffna@yahoo.com
Office:+94212220233
Mobile:-+94771659845
+94775437217
Web:-www.eeswaa.com

Parameshwaran
Licensed Surveyor & Leveller
இல.354, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
பதி.இல.-19741613

சரவணா ரெக்ஸ்
இல. 770, 772, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே :- 021 222 0421

அனைத்து விதமான ஆடைகளையும்
பெற்றுக் கொள்ள
கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
பலாலி றோட்,
உரும்பிராய்ச்சந்தி
T.P. :- 0772288245

ஸ்ரீ ஐங்கரன் கூ பலஸ்
இல. 315B, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

அன்னக்கிளி பல்பொருள் அழகுமாடம்
Annakili Multi Goods Fancy House
இல. 205 A, பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை
வான், முச்சக்கர வண்டி, உழவு இயந்திரம் (ரக்ரர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற முடியும். கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
தலைமைக் காரியாலயம், இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 4923200


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசெம்பர் 4 இல் அதிபர், ஆசிரியர்கள் சுகவீனவிடுப்பு போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணம் உட்பட நாட்டின் அனைத்து பாகங்களிலுமுள்ள பாடசாலைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி ஸ்தம்பிதமடையவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

குறித்த திகதியன்று நாட்டின் அனைத்து பாகங்களிலுமுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் சுகவீன விடுப்பு போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அதிபர், ஆசிரியர்களின் சம்பளமுரண்பாடு, இடைக்கால சம்பளத்திட்டம், பதவி உயர்வு போன்றவற்றிற்கு தீர்வு வழங்கக்கோரி பல முறை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தோம். இதிலொரு அங்கமாக 13 தொழிற்சங்கங்கள் இணைந்து கொழும்பில் மிகப் பெரும் நடைபவனியினையும் மேற்கொண்டிருந்தோம்.

இந் நடைபவனி அரசினால் அவமதிப்புக்குள்ளாக்கப்பட்டதோடு இதுவரை அதில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கல்வி அமைச்சு கோரியதன் அடிப்படையில் இதுவரை கால அவகாசமும் அரசிற்கு வழங்கப்பட்டது.

எனினும் அதனை சரியாக பயன்படுத்தத்தவறிய அரசு இதுவரை காலமும் எமது கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கவில்லை. கல்வி அமைச்சும் அரசுக்கு ஆதரவாக அங்கு ஊதிக் கொண்டு இருக்கிறதே தவிர அதிபர், ஆசிரியர் விடயத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாக தெரியவில்லை.

அந்த வகையில் எமது கோரிக்கைகளினை நிறைவேற்றுவதற்கு தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க நாம் தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதியன்று நாட்டின் அனைத்து பாகங்களிலுமுள்ள பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் சுகவீன விடுமுறையில் தமது வீடுகளில் நின்று எதிர்ப்பில் ஈடுபடுவார்கள் என தெரிவித்த அவர் அரசு எமக்கான தீர்வினை வழங்கும் வரையில் எமது போராட்டம் தொடரும் என்பதோடு பன்மடங்கு அதிகரிக்கும் எனவும் அவர் கூறினார். (அ-4)

# ஆசிரியர் தொழில் கடினமானதல்ல

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

(கொழும்பு)

ஆசிரியர் தொழில் என்பது மிகவும் கடினமான தொழில் இல்லை என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் நடைபெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் போது 5 வருடங்கள் மாத்திரமே பின்தங்கிய பிரதேசங்களில் பணியாற்ற வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறது. சில தெரிவுகளை மேற்கொள்ளும் போது ஏனைய அதிமுக்கிய தேவைகளை விட்டுக் கொடுக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையில் ஆசிரியர்கள் சுய நலம் கருதாது தமது பணிகளை செய்து முடிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# ஜனாதிபதி அமைச்சு பதவிகளை வகிப்பது பொருத்தமற்றது

## அத்துரலிய ரத்னதேரர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அமைச்சு பதவிகளை வகிப்பது பொருத்தமற்றது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கூறியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை தமது கட்சி ஏற்றுக் கொண்டாலும் பாதுகாப்பு அமைச்சை தவிர ஏனைய அமைச்சு பதவிகளை ஜனாதிபதி வகிப்பது பொருத்தமற்றது. இதனடிப்படையில் நிதியமைச்சையோ ஏனைய அமைச்சுக்களையோ ஜனாதிபதி வகிப்பது ஏற்புடையதல்ல.

அத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நீதிமன்றத்துக்கு பொறுப்புக்கூற முடியாது என்ற நிலையில் நாட்டில் உள்ள சகலரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்ற நிலைமை இல்லாது போயுள்ளது.

ஜனாதிபதியானவர் நாடாளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் பொறுப்புக்கூற வேண்டிய வகையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# நீர்வளத்தை பாதுகாக்க பொதுமக்களுக்கு அழைப்பு!

(கொழும்பு)

நீர் உரிமையை பாதுகாத்தல் தொடர்பில் மக்களிடம் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இந் நடவடிக்கையானது நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சூழலியலாளர் ரவீந்திர காரியவசம் குறிப்பிட்டார்.

நீரேந்து பிரதேசங்களை பாதுகாத்தல், நீர் பாதுகாப்பு தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இத்திட்டத்தின் முக்கிய கருப்பொருட்களாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கிணறுகளைக் கொண்டிருக்கும் வீடுகளுக்கு விதிக்கப்படவுள்ள வரி தொடர்பிலும் தாம் எதிர்ப்பை வெளிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களிடம் கையெழுத்து பெறுவதோடு அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்படவுள்ளது. (அ-2)

# நவீன கல்வியை அறிமுகப்படுத்தும் காலம் கனிந்துள்ளது-நாமல் எம்.பி.

இலங்கையில் நவீன கல்வியை அறிமுகப்படுத்தும் காலம் தற்போது கனிந்துள்ளது. கல்வித்துறையில் அரசியல் இலாபம் நாடாது கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கில் செயற்படுவதை குறிக்கோளாக கொண்டு நாம் செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சின் வரவு செலவுத்திட்ட விவாத உரையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கல்வித்தரத்தில் பாடசாலைகள் சமத்துவம் காண்பது அவசியம். இதனால் பாடசாலைகளின் ஏற்றத்தாழ்வு, மனோபாவம் மாறும் என்று அவர் கூறியுள்ளார். (அ-2)

# சுற்றுலாப் பயணிகள் வருகை தொடர்பில் விசேட கவனம்

## சுற்றுலா அதிகார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலன் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என இலங்கை சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகார சபையும் சுற்றுலாப் பொலிஸாரும் இணைந்து இந்தத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர். இந்த விடயம் குறித்து முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு பணிகளை வழங்குபவர்களுக்கு விசேட விழிப்புணர்வை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சுற்றுலா அதிகார சபை, இலங்கை புகையிரத சேவை, சுற்றுலா பொலிஸ் என்பனவற்றைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் அண்மையில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளுக்கு பல வகைகளில் சிரமத்தை ஏற்படுத்துபவர்கள் குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை சுற்றுலா பயணிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு சட்ட ரீதியான கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பாடசாலைகளில் மாணவர் படையணி

மஹிந்த சிந்தனைத்திட்டத்தின் கீழ் அனைத்து பாடசாலைகளிலும் மாணவர் படையணியை ஆரம்பிப்பதற்கு தேசிய மாணவர் படையணி அமைப்பு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் தேசிய மாணவர் படையணி அமைப்பானது 50 ஆயிரம் மாணவர்களுக்கு கெடெட் பயிற்சி அளித்து வருவதாக அதன் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர தெரிவித்தார்.

கெடெட் சாஜன்களுக்கான கெடெட் உயர்பயிற்சி அடுத்த வருடம் ரன்தம்பை கெடெட் பயிற்சி நிலையத்தில் 9 நாட்களுக்கு இடம்பெறவுள்ளது. இதில் ஆயிரத்து 600 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)





யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வு நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் பிரதம விருந்தினரும் பாடசாலை அதிபரும் நிற்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன், என்.குமார்)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

செய்யத்தக்கது இது என்று தெரிந்தும் எவன் அதைச் செய்யாமல் இருக்கின்றானோ அவனே கோழை.
-கன்பூசியஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கல்வி அதிகாரிகளுக்கு அதிகாரத்தைக் கொடுங்கள்

வட மாகாணத்தின் கல்வி வீழ்ச்சி குறித்த கவலை கள் மட்டும் வீழ்ச்சிக்கான நிவாரணமாக மாட்டாது.

மாறாக மாணவர்களின் கல்விப் பெறுபேற்றை -கல்வி அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேநேரம் கல்வி வீழ்ச்சியை நிவர்த்தி செய்கின்ற பெரும் பணி என்பது வடக்கு மாகாண ஆளுநரின் கையிலோ அல்லது வடக்கு மாகாண உயர்மட்ட அதிகாரிகளிடமோ இல்லையென்ற உண்மையும் உணரப்பட வேண்டும்.

உண்மையில் கல்வி வீழ்ச்சிக்கு முற்றுப் புள்ளிவைப்பதென்பது; ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள் உட்பட வலயக் கல்வி அலுவலகத்தினரின் கைகளில் உண்டு என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஆசிரியர்கள் தமது கடமையை சரிவர செய்யாவிட்டால், மாணவர்கள் கல்வி தமக்கு மிகவும் அவசியமானதென்பதை உணராவிட்டால் முப்படைகளையும் நிறுத்தி ஆட்லறி அடித்தாலும் கற்றல் செயல்பாட்டை இம்மியும் உயர்த்த முடியாது.

எனவே வட மாகாணத்தின் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கல்வி எழுச்சிபெற வேண்டுமாயின் வடக்கு மாகாண ஆளுநரின் நேரடித் தலையீடுகள் பெருமளவுக்கு நிறுத்தப்பட்டு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பூரண அதிகாரம் வழங்க வேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநரின் கடும் பிடிகாரணமாக வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் கட்டிட வளங்கள் அதிகரித்தன என்ற உண்மையையும், உரிய காலத்திற்குள் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டதென்பதையும் மறுப்பதற்கில்லை.

அதேநேரம் அதிபர்கள், ஆசிரியர்களின் இடமாற்ற விடயத்திலும் ஆளுநர் அல்லது அரசியல் தலையிடுவதென்பது கல்வி அதிகாரிகளின் கடமையை அவர்கள் எடுக்கக் கூடிய சட்டநடவடிக்கையை பலவீனப்படுத்திவிடும்.

எனவே கல்வி அதிகாரிகளுக்கு இருக்கக் கூடிய சகல அதிகாரங்களையும் வழங்கி அவர்களை அச்சமின்றி நடவடிக்கை எடுத்து கல்வி வளர்ச்சிக்கு உதவ இடம் கொடுத்தல் மிகவும் அவசியம்.

அடுத்து, மாணவர் அனுமதியென்பது சகல பாடசாலைக்குமாக பிரித்தளிக்கப்பட வேண்டும்.

இது விடயத்தில் மனித உரிமைகள் அமைப்புகள் பொறுப்போடு நடந்து கொள்வது கட்டாயமானதாகும்.

பின்தங்கிய பாடசாலைகள் என்ற நிலைமை முறியடிக்கப்பட வேண்டுமாயின் எல்லாப் பாடசாலைகளிலும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமானதாக இருக்க வேண்டும்.

இதுவிடயத்தில் கல்வி அதிகாரிகள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்காதவரை வடமாகாணத்தில் கல்வி வீழ்ச்சியைத்தடுப்பது முடியாத காரியம் என்பதால், ஊர்ப்பாடசாலை, அயல் பாடசாலையில் மாணவர்களை அனுமதியுங்கள் என்ற கோசம் கல்வி திணைக்களத்தில் மட்டுமன்றி பொது அமைப்புகள் மத்தியிலும் எழ வேண்டும்.

# தீபத்திருநாளில் விளக்கேற்ற பாதுகாப்பு அமைச்சு அனுமதி

## இராமச்சந்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்துமக்கள் தீபத்திருநாளை நாளை செவ்வாய்க்கிழமை தீபமேற்றி கொண்டாடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கார்த்திகை 27அம் திகதி மாவீரர் தினத்தன்றே கார்த்திகைத் தீபத் திருநாளும் இணைந்து வருவதால் இவ் விடயம் தொடர்பில் இந்து சமய கலாசார பேரவையின் செயலாளர் இராமச்சந்திரனும் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரரும் பாதுகாப்பு அமைச்சிடம் தொடர்புகொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்து மக்கள் இவ்வருடமும் கார்த்திகைத் தீபத்திருநாளை வழமை போல் விமரிசையாகக் கொண்டாடலாம் என்றும் அதற்கு எத்தடையும் இல்லையெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திருநாளன்று வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் ஆலயங்களிலும் இல்லங்களிலும் தீபம் ஏற்ற தடையிருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகி மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் இல.29, பழம் வீதி, கந்தர்மடத்திலும் ஏ-9 வீதி சாவகச்சேரியிலும் அமைந்துள்ள இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் காரியாலயத்தில் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பொது அறிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தினால் மாற்றுவலுவுடையோருக்கான பொது அறிவுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி திருநெல்வேலியில் உள்ள வலுவிழந்தோர் சங்கத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக கொக்குவில் பொதுநூலகர் அறிவித்துள்ளார். (அ)

## கடற்காற்றின்மூலம் மின் உற்பத்தி

(கொழும்பு)

கடற்காற்று மூலம் நாட்டின் மின்சக்தி உற்பத்தியை முன்னெடுப்பது குறித்து ஆய்வுகளை நடத்துவதற்காக பிரித்தானிய எரிசக்தி நிபுணர்கள் சிலர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தக்குழுவில் இலங்கை மின் பொறியியலாளர் நிமல் டி சில்வாவும் அடங்குவார்.

நீர்கொழும்பிலிருந்து நெடுந்தீவு வரையான கடல் வலயத்திலிருந்து காற்றலை மின்சக்தியை உற்பத்தி செய்வது தொடர்பாக தமது ஆய்வுகளின் மூலம் கவனம் செலுத்தவுள்ளதாக அவர்கள் தெரிவித்திருந்தனர். (அ-2)

## கொரெக்ஸ் டி மருந்து சட்டவிரோத விற்பனை

(கொழும்பு)

நாட்டில் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள கொரெக்ஸ் டி மருந்தை சிலர் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்து வருவதாக தேசிய மருந்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

சில தனியார் ஒசுசலக்களில் இந்த கொரெக்ஸ் டி விற்பனை செய்யப்படுவதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கொரெக்ஸ் டி மருந்தை அருந்திய 7 பேர் அண்மையில் உயிரிழந்தனர். இதனை அடுத்து கொரெக்ஸ் டி விற்பனையை சுகாதார அமைச்சு இலங்கையில் தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பிறப்பு தொடக்கம் இறப்புவரை வரி

### கே.டி.லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் பல வழிகளில் வரி அறவிட்டு இலாபம் ஈட்டிக் கொள்ளும் சாத்தியமற்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக மக்கள் விடு தலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

பிறப்பு தொடக்கம் இறப்பு வரை வரி அறவிட அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போது கவனம் செலுத்தாதுள்ள பலதுறைகளில் எதிர்வரும் காலத்தில் வரி அறவீடு செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதென அவர் குறிப்பிட்டார். இது நாட்டு மக்களுக்கு மேலதிக சுமை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அளவான தேவை



தேவையைப் பெருக்கிக்கொண்டே செல்லக்கூடாது. பெருக்கினோமானால் அனுபோகத்திலேயே மனம் சென்று கொண்டிருக்கும். பழிச்செயல் புரிந்து மேலும் மேலும் பிறவித் தொடர் நீளும். தேவைகளை முடிந்தவரை (To the minimum) சுருக்கவேண்டும். அப்போதுதான் வந்த வேலையை முடிக்க முடியும்.

வந்தவேலை எது? முறையோடு வாழ்ந்து பாவப்பதிவுகளை எல்லாம் அழித்து, இனிப்பழி புரியாத தகைமைபெற்று, தன்னை அறிந்து, அறிவில் முழுமையை அடைந்து, ஆசைகள் எல்லாம் ஒழிந்த நிறைமனம் என்னும் நிர்க்குணம் பெற்று முக்தி பெறவேண்டியதன்றோ வந்தவேலை? அந்த வேலைக்கு இடையூறான இந்த ஆசையை முதலில் ஒழுங்கு செய்தாகவேண்டும். நல்ல விருப்பங்களின் மேலும் உணர்ச்சிவேகப் பிடிப்பை மாற்றியாகவேண்டும்.

துய்ப்புப் (அனுபோகம்) பொருட்கள் குறையக்குறைய உடல்நலம் காக்கப்பெறும். இங்கொரு ஆலை, அடுத்த ஊரில் ஒரு கம்பனி, இன்னொரு ஊரில் உற்பத்திச்சாலை, அங்கேயொரு விவசாயப் பண்ணை, நான்கு வீடுகள், இரண்டு எஸ்டேட்டுக்கள் என்றெல்லாம் சொத்துக்கள் பெருகாமல் பார்த்துக்கொண்டால் உடல்நலத்தோடு மன அமைதியும் காக்கப்பெறும்.

நமது பொறுப்பிலும் பராமரிப்பிலும் இருக்கும் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாக இருந்தால் அந்த அளவில் நமது சுதந்திரம் காக்கப்பெறும். அனுபோகப் பொருட்கள் மிகமிக உடல் நலம் கெடும். சொத்துக்களின் எண்ணிக்கை மிகமிக மன அமைதி கெடும். பாதுகாக்கப்படவேண்டிய குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கை மிகமிகச் சுதந்திரம் கெடும்.

அதேசமயத்தில் நமது கடமைகளையும் பொறுப்புக்களையும் அலட்சியம் செய்யவோ தள்ளிவிடவோ கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காற்பந்தாட்ட சுற்றுப் போட்டி; யாழ். மாவட்ட அணி வெற்றி

தேசிய காற்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்காக 21 வயதுப் பிரிவு மாவட்ட அணிகளுக்கிடையிலான காற்பந்தாட்ட போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றியிருந்த யாழ்ப்பாண மாவட்ட அணி கடந்த வியாழக் கிழமை அம்பாறை அணியினை வென்றிருந்தது.

தொடர்ந்து இரண்டாவது சுற்றில் வெள்ளிக் கிழமை வவுனியா மாவட்ட அணியினை எதிர் கொண்டது.

ஆட்டத்தில் தொடக்கம் முதல் ஆட்டத்தினை தம் வசம் வைத்திருந்தது யாழ்ப்பாண மாவட்ட அணி. அடுத்தடுத்து 5 கோல்களைப் போட்டு வவுனியா அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது.

வவுனியா அணி பதிலுக்கு ஒரு கோலினைப் போட்டது. பதிலுக்கு யாழ்ப்பாண மாவட்ட அணி மேலும் ஒரு கோல் போட்டது. முதல் பாதி ஆட்டத்தில் 6:1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண மாவட்ட அணி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணி மேலும் இரண்டு கோல்களைப் போட்டது. இதன் பின்னர் வவுனியா அணி மேலும் கோல்கள் போடாமல் தடுத்து வந்தது.

இறுதி நேரத்தில் வவுனியா மாவட்ட அணி ஆறுதலுக்கு ஒரு கோலினைப் போட்டது. இறுதியில் 8:2 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண மாவட்ட அணி வெற்றி பெற்றது.

# ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்ட போட்டி

கிளிநொச்சி மாவட்ட ஜனாதிபதி தங்கக்கிண்ண கரப்பந்தாட்டப் போட்டிகள் அடுத்த மாத முதற்பகுதியில் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ள அணிகளை சிறந்த முறையில் தயார்படுத்திக் கொள்ளுமாறும் போட்டிகள் இடம்பெறவுள்ள மைதானங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொற்பதி விளையாட்டுக்கழக அணி வெற்றி



யாழ். காற்பந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் விலகல் முறையிலான காற்பந்தாட்ட போட்டியில் பொற்பதி விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியுள்ளது.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இப்போட்டியில் பொற்பதி விளையாட்டுக்கழகமும் பாரதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆரம்பத்திலிருந்து இரு அணிகளும் சமபலத்துடன் மோதின. ஆனாலும் போட்டியின் 15 ஆவது நிமிடத்தில் பொற்பதி விளையாட்டுக்கழக வீரன் கு.விஜயகுமார் முதலாவது கோலினை அடித்து தமது அணியின் ஆதிக்கத்தை நிரூபித்தார்.

முதல் பாதி ஆட்டத்தில் பொற்பதி அணி 1:0 என்று முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் அடுத்த நிமிடத்தில் பொற்பதி அணி வீரர் இ.விஜயகுமார் ஒரு கோலினை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். பதிலுக்கு பாரதி விளையாட்டுக்கழக வீரர் த.விஜிதரன் ஒரு கோலினைப் போட்டார்.

போட்டியின் இறுதி நேரத்தில் கிடைத்த வாய்ப்பு ஒன்றை சரியாக பயன்படுத்திய பொற்பதி விளையாட்டுக்கழக அணி வீரர் இ.விஜயகுமார் சோலாக மாற்ற பொற்பதியின் வெற்றி உறுதியானது.

இறுதியில் பொற்பதி விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# கஜிபன் சதம்; ஸ்கந்தவரோதயக் கல்லூரி வெற்றி

இலங்கை கிரிக்கெட் சபை நடத்திவரும் 13ஆவது பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சென்ஜோன்ஸ் கல்லூரி B அணியினை ஓர் இனிங்ஸ் மற்றும் 63 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

கடந்த புதன்கிழமை ஸ்கந்தா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தா அணித்தலைவர் இ.தனுஜன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி களமிறங்கிய ஸ்கந்தா அணிமுதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இந்த அணி சார்பாக எஸ்.கஜீபன் 90பந்துகளில் ஒரு சிக்ஸர் 15 நான்கு ஓட்டம் அடங்கலாக ஆட்டம் இழக்காது 100 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். இந்தப் பருவகாலத்தில் வடமாகாணத்தில் 13 வயதின் கீழ் பிரிவினருக்கான முதல் சதம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

எம்.விதுசன் 11 ஓட்டங்களைப் பெற்றார். சென்.ஜோன்ஸ் அணியின் பந்துவீச்சில் பிரசாந் 5 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களைக்கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். விதுசன், கௌசிகன், றாஜ் ஆகியோர் முறையே 3,1,1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி அணி ஸ்கந்தாவின் துல்லியமான பந்துவீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாமல் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 34 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஸ்கந்தா அணி பந்துவீச்சில் வி.தனுஜன் 12 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் விதுசன், மகிபன், திக்சிகன், தனுசன் ஆகியோர் முறையே 2,1,1,1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பலோ ஒன்முறையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி இரண்டாவது இனிங்ஸில் மீண்டும் 34 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் ஓர் இனிங்ஸ் மற்றும் 63 ஓட்டங்களால் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வெற்றியீட்டியது.

இரண்டாவது இனிங்ஸில் ஸ்கந்தா அணி பந்து வீச்சில் எ.தனுசன், 13 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் வி.தனுஜன் 12 ஓவர்கள் பந்து வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனசரின் சுழலில் சிக்கியது இந்தியா




இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2-வது போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நேற்றைய நாள் முடிபில் இங்கிலாந்து அணிக்கான வெற்றி வாய்ப்புக்கள் பிரகாசமாக காணப்படுகின்றன.

2 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தை தொடர்ந்த இங்கிலாந்து அணி, 413 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

கெவின் பீற்றர்சன், அலஸ்ரெயர் குக் இருவரும் மிகச்சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கியிருந்தனர்.

கெவின் பீற்றர்சனின் ஆட்டமிழப்பை அடுத்து இங்கிலாந்து அணியின் விக்கெட்டுக்கள் இலகுவாக வீழ்த்தப்பட்ட போதிலும் இங்கிலாந்து அணி ஏற்கெனவே அதிகமான ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக கெவின் பீற்றர்சன் 186 ஓட்டங்களையும், அலஸ்ரெயர் குக் 122 ஓட்டங்களையும், நிக் கொம்ரன் 29 ஓட்டங்களையும், சமித் பட்டேல் 26 ஓட்டங்களையும், மற் பிரையர் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக பிரக்ஜான் ஓஜா 5 விக்கெட்டுக்களையும், ரவிச்சந்திரன் அஷ்வின், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

86 ஓட்டங்கள் பின்னிலையில் தனது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்றைய நாள் முடிபில் 7 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறி வருகிறது.

இந்திய அணி வசம் 3 விக்கெட்டுக்கள் உள்ள நிலையில் அவ்வணி 31 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக கௌதம் காம்பீர் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களைப் பெற்றார்.

ரவிச்சந்திரன் அஷ்வின் பெற்ற 11 ஓட்டங்களைத் தவிர வேறு எந்த வீரரும் இரட்டை



ஓட்டங்களைத் தாண்டவில்லை.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக மொண்டி பனேசர் 5 விக்கெட்டுக்களையும், கிரேம் ஸ்வான் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மும்பையில் இடம்பெற்றுவரும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 327 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தடுமாறுகிறது தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நேற்றைய நாள் முடிபில் அவுஸ்திரேலிய அணி வெற்றியை நெருங்கியுள்ளது. 5 விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தைத் ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்று தனது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அவுஸ்திரேலிய அணியின் பின்வரிசை வீரர்கள் தேவையான ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.



துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் ஹசி 54 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் 41 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 38 ஓட்டங்களையும், ஜேம்ஸ் பற்றின்சன் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோர்க்கல், ரோறி கிளெய்ன் வெல்ட்ற் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் டேல் ஸ்ரெய்ன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

430 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு தனது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்றைய நாள் முடிபில் 77 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறி வருகிறது. ஏ.பி.டி.வில்லியர்ஸ் மற்றும் டு பிளசீஸ் ஆகியோர் ஆட்டமிழக்காது ஆடி வருகின்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக நேதன் லயன் 2 விக்கெட்டுக்களையும், பென் ஹில்பென்ஹோஸ் மற்றும் பீற்றர் சிடில் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அடிலெய்டில் இடம்பெற்றுவரும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 550 ஓட்டங்களையும், தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 388 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## நியூசிலாந்து சிறப்பான அடித்தளம்



இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று ஆரம்பித்தது.

நேற்றையநாள் முடிபில் நியூசிலாந்து அணி மிகப் பலமான நிலையில் காணப்படுகிறது.

கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் இடம்பெறும் இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய நியூசிலாந்து அணி, நேற்றைய நாள் ஆட்டம் மழை காரணமாக 9.1 ஓவர்கள் முன்னதாக இடை நிறுத்தப்பட்ட போது 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 223 ஓட்டங்களைக் குவித்தது.

நியூசிலாந்து அணி 2 விக்கெட்டுக்களையிழந்து 14 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் இணை சேர்ந்த கேன் வில்லியம்ஸன், ரோஸ் ரெய்லர் இருவரும் மிக சிறப்பாக ஆடி வருகின்றனர்.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக ரோஸ் ரெய்லர் ஆட்டமிழக்காமல் 119 ஓட்டங்களையும், கேம் வில்லியம்ஸன் ஆட்டமிழக்காமல் 95 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக வீழ்த்தப்பட்ட 2 விக்கெட்டுக்களை நுவான் குலசேகரவும் சமின்ட ஏரங்கவும் வீழ்த்தியிருந்தனர்.

நேற்றைய தினம் போட்டி குறித்த நேரத்திற்கு முன்னதாகவே மழை காரணமாக முடிக்கப்பட்ட நிலையில் இன்றைய ஆட்டம் 15 நிமிடங்கள் முன்னதாக ஆரம்பிக்கவுள்ளது. இதன்படி இன்று ஆட்டம் 9.45க்கு ஆரம்பமாகும்.

## தொடரை சுவீகரித்தது மேற்கிந்தியதீவுகள்

பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 10 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றுள்ளது.

இதன்படி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை மேற்கிந்தியத்தீவுகள் அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி கொண்டுள்ளது.

குல்னாவில் இடம்பெற்றுவந்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி அறிமுக வீரர் அபுல் ஹசனின் சதத்தின் உதவியுடன் 387 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் சார்பாக பிடல் எட்வேர்ட்ஸ் 6 விக்கெட்டுக்களையும், டரன் சமி 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலளித்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி மார்லன் சாமுவேல்ஸின் இரட்டைச் சதம், சிவ்நாரின் சந்தர்போல், டரன் பிராவோ ஆகியோரின் சதங்களின் உதவியுடன் 9 விக்கெட்டுக்களை இழந்து 648 ஓட்டங்களைப் பெற்றது.

ஷகிப் அல் ஹசன் 4 விக்கெட்டுக் களையும், சொஹக் கஷி 3 விக்கெட்டுக்களையும், ருபைல் ஹொசைன் 2 விக்கெட்டுக்களையும் பங்களாதேஷ் சார்பாக கைப்பற்றியிருந்தனர்.

தனது 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ஷகிப் அல் ஹசனின் 97 ஓட்டங்கள், நசீர் ஹொசைனின் 94 ஓட்டங்களின் உதவியுடன் 287 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ரினோ பெஸ்ட் 6 விக்கெட்டுக்களையும், வீரசம்மி பேர்மாள் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன்படி 27 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவையான நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 4.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக இரட்டைச்சதம் பெற்ற மார்லன் சாமுவேல்ஸைப் போலத் தொடரின் நாயகனாக சிவ்நாரின் சந்தர்போலும் தெரிவாகினா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

சவுதி அரேபிய அரசாங்கத்தால் நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் 60 பேர் நேற்று நாடு திரும்பினர்.

வேலைவாய்ப்புகளைப் பெற்றுச் சென்று அங்கு பல்வேறு குற்றச்சாட்டுகள் காரணமாக சிறைத் தண்டனை அனுபவித்து வந்தவர்களில் 60 பேரே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை, குருநாகல், அநு ராதபுரம், பதுளை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இளைஞர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களாவர்.

இவர்கள் சவுதியின் ஜெத்தா சிறைச்சாலையில் 2 முதல் 7 மாதங்கள் வரை சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களிடம் பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைகளை மேற்கொண்டதை அடுத்து இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (எ-11)

# அமைச்சர் கேட்கும் '13' எதிர்க் கட்சிகள் எதிர்ப்பு

அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்ற நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களில் ஒருவர் கேட்கின்ற 13 தொடர்பில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு ஊடகவியலாளர் மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்த விடயம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ஹப்புஹாமியே மேற்படி விவகாரம் தொடர்பில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

13-வது திருத்தம் தேவையா? இல்லையா? என்ற வாத, விவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் தனக்கு 13 என்றால் பிடிக்கும் என்றும் அதற்கு விளக்கமும் அளித்துள்ளார்.

அதாவது தனக்கு 13 பிடிக்குமாம். ஏனென்றால் 13 வயதில்தான் பெண் பிள்ளைகள் பூப்படைகின்றார்களாம். அதனால் தனக்கு 13 பிடிக்கும் என்று கூறியுள்ளார். இவ்வாறான சிந்தனை கொண்டவர்களுக்கு மக்கள் நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்றார். (எ-11)

## இனப்பிரச்சினைத்...

கொள்ளப்படும். இதற்கு புலம்பெயர் தமிழர்களும் தம்மாலான பங்களிப்பை வழங்குவார்கள் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்கின்றதா? நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம்வகிக்கச்சித்தமாகவுள்ளதா? என்றபோது, மேற்படி கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர், இவை இரண்டு இருவேறுபட்ட விடயங்கள் என்றும், கூட்டமைப்பை பொறுத்தமட்டில் சில விடயங்களில் தெளிவாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து விபரிக்கையில், தென்னாபிரிக்காவை நாம் பரிபூரணமாக வரவேற்கின்றோம். அவ்வாறே இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளையும் நாம் வரவேற்கின்றோம். அவர்களின் பங்களிப்பும் உறுதிப்பாடும் எமக்கு அவசியமாகும்.

அடுத்த ஜனவரி மாதம் எமக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஆபிரிக்க யூனியனுடனும் பேச்சுகளை நடத்தவுள்ளோம்.

எம்மைப் பொறுத்தமட்டில் பேச்சுகளை அரசாங்கத்துடன் மேற்கொள்ள உண்மைத் தன்மை அவசியமாகும். இதனை நாம் தென்னாபிரிக்க பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறியுள்ளோம்.

தொடர்ச்சியாக இலங்கை அரசின் ஏமாற்றங்களுக்கு கூட்டமைப்பு ஆளாகியுள்ளதால் நாம் மிகவும் எச்சரிக்கையுடனேயே செயற்பட்டு வருகின்றோம். இதன் அடிப்படையில் தென்னாபிரிக்க அரசு எமக்கு மூன்று வகையில் உதவிகளை வழங்கலாம்.

முதலாவது மத்தியஸ்தராக, இரண்டாவது ஏற்பாட்டாளராக, மூன்றாவது உறுதியான பார்வையாளராக ஏதேனும் ஒரு வகையில் எமக்கு உதவ முடியும்.

குறைந்த பட்சம் பார்வையாளராக எமக்கு உதவுவதானால் அதன் மூலம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறான நிலையிலேயே இலங்கை அரசுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடியதாகவிருக்கும்.

அதன் பின்னரே தெரிவுக் குழுவில் இணைவது தொடர்பில் சிந்திக்கக்கூடியதாக இருக்கும்.

கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் தெரிவுக்குழுவில் இணைவதற்கு எதிர்ப்பைக் கொண்டிருக்கவில்லை.

ஆனால் இலங்கை அரசின் கபட வலைக்குள் சிக்கக் கூடாது என்பதில் கூட்டமைப்பு உறுதியாகவே உள்ளது என்றார். (எ-11)

## பங்களாதேஷில்...

தொழிற்சாலை ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவில் ஏற்பட்ட தீ விபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் முகமாக மாடியிலிருந்து பலர் கீழே குதித்துள்ளனர். இதனாலும் சிலர் பலியாகியுள்ளனர்.

இந்தத் தீ விபத்திற்கான காரணம் இது வரையில் தெரியவரவில்லை. இருப்பினும் மின் ஒழுக்குக் காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என அந்த நாட்டு அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அந்தநாட்டுதீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (எ-11)

MOBILE PHONE
REPAIRING COURSE
நீங்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா? வேலைசெய்து கொண்டு பகுதி நேரமாக வருமாணம் ஈட்ட வேண்டுமா?
உங்கள் எதிர்காலத்திற்கு......
மாதம் 150,000/-க்கு மேல் வருமானம்
பெறும் நிரந்தர தொழில் வாய்ப்பு
சர்வதேச தரத்திலான டிப்ளோமா சான்றிதல்
திருத்தும்துறையில் பத்து வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 1000 க்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதல்தர ஆசிரியர்
Ganesh.K
கட்டணம் 9500/=
□ பாடநெறிக்கு செலுத்திய கட்டணத்தை முதல் மாதத்திலே சம்பாதித்துகொள்ள முடியுமா முதலீடு
□ நவீனமான MOBILE போன் REPAIR பன்னும் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
□ மிககுறைந்த செலவில் மிக சிறிய இடத்தில் மிக குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்கக்கூடிய ஒரு சிறந்த சுயதொழில்
(அ-1609)
4 Days Course
5 வது நாளில் தொழிலை ஆரம்பிக்க உங்களுக்கு 100% நாங்கள் உத்தரவாதம் வழங்குவோம்.
பதிவுகளுக்கு விரையுங்கள்
28வது பிரிவு வவுனியாவில் ஆரம்பம்.
SUN BRITISH COLLEGE
No:-26, Station Road, Vavuniya.
T.P:-0770 58 46 58, 024 2226649
15வது பிரிவு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்.
IISEEES NALLUR CAMPUS
No:-762, Point Petro road, Nallur,Jaffna.
T.P:- 0777444225, 021 222 4728

# பூனையாக இருந்து புலியான விமல்

(கொழும்பு)

மாகாண சபை முறைமையைக் கொண்டு வருவதற்காக இந்திய அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும்போது பூனையைப் போன்று இருந்த விமல் வீரவன்ச, இன்று ஒரு வீரரைப் போல் மாகாண சபை வேண்டாம் என்று கூச்சலிடுவது நகைச்சுவையாக உள்ளது என்று ஆளும் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் உதித் அநுராத தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியைக் காட்டிக் கொடுத்து விட்டு புதிய கட்சியொன்றை ஆரம்பித்துக் கொண்ட விமல் வீரவன்ச, ஜனாதிபதியின் ஆசிர்வாதத்தில் அமைச்சுப் பொறுப்பொன்றைப் பெற்றுக்கொண்டு விட்டு இப்போது மாகாண சபை வேண்டாம் என்று கூறுவது வெட்கமற்றதனத்தைக் காண்பிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்புளை, கலோகஹஎல பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மாகாண சபை உறுப்பினர் உதித் அநுராத மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ-11)

# சம்பூரில் வெடிப்பு பெண் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை சம்பூர் பகுதியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 38 வயதான பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

சம்பூர் பகுதியில் அவரது வீட்டு வளாகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண் குப்பைகளைக் கூட்டி தீ வைத்தபோதே இந்த வெடிப்பு இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவத்திற்கான காரணம் குறித்து இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், கிடைத்த பொருட்களைப் பயன்படுத்தி செய்யப்பட்ட வெடிப்புச் சாதனம் ஒன்றின் காரணமாகவே இந்த வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் என தாம் நம்புவதாகவும் கூறினார். (எ-11)

## கிழக்கில் பொது...

நடவடிக்கைகள் மக்கள் மனதில் நீங்காத நிலையையே ஏற்படுத்தும்.

மாவீரர் தினம் என்பது போரின்போது உயிரிழந்த போராளிகளை நினைவுகூருவதாகும்.

அவர்கள் வேறு யாரும் அல்ல; எங்கள் உறவுகள். அவர்களை நினைவுகூரும் உரிமை எங்களுக்கு இருக்கிறது.

அத்துடன் எதிர்வரும் கார்த்திகை 28ஆம் திகதி இந்துக்களின் புனித தினமான கார்த்திகை விளக்கீடு இருக்கிறது.

அதனை இந்துகள் வழிபாடு செய்யாமல் தடுப்பது அடிப்படை உரிமை மீறலாகவே பார்க்கப்பட வேண்டும்.

அதுமட்டுமன்றி மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேசத்தில் உள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தில் வீடு வீடாகச் செல்கின்ற படையினர் குடும்ப விபரங்களைத் திரட்டுவதுடன் குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களை புகைப்படமும் எடுத்து வருவதாகவும் அந்த பகுதி மக்கள் தன்னிடம் தெரிவித்ததாக அரியநேத்திரன் கூறினார்.

சில குடும்பங்களில் கணவன்மார் வெளிநாடு சென்றுள்ளதால் மனைவியை மாத்திரம் வைத்து புகைப்படம் எடுக்கின்றனர்.

அத்துடன் பகல் வேளைகளில் வீடுகளுக்கு செல்வதனால் கணவன் தொழிலுக்கும் பிள்ளைகள் பாடசாலைக்கும் சென்றுள்ள நிலையில், குடும்பப் பெண்ணை தனியாக வைத்து புகைப்படம் எடுப்பதால் அந்த பெண்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் மீண்டும் எதுவித அனுமதியுமின்றி யாருக்கும் தெரியாமல் படையினர் இவ்வாறான விபரங்களைத் திரட்டுவது மக்களுக்கு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்றில் இடம்பெறவுள்ள பாதுகாப்பு தொடர்பான விவாதத்தின்போது வெளிக்கொணரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

# அரச அதிபரின் வீட்டில் கொள்ளை

(கண்டி)

கண்டி மாவட்ட அரசாங்க அதிபரின் வீட்டில் சுமார் 4 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்கள் காணாமல் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி புஷ்பதான மாவத்தையில் அமைந்துள்ள அரசாங்க அதிபரின் வீட்டில் நேற்று முன்தினமிரவு இந்தச் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக கண்டி குற்றத்தடுப்பு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக அரசாங்க அதிபரின் மனைவியான ஆசிரியை அமிதா செனவிரத்ன, கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தங்கச்சங்கிலி, வளையல், மோதிரம் உட்பட பல நகைகள் திருட்டுப் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என்பதுடன், விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## பிரதம நீதியரசர்...

இவ்வாறு தனித்துவம் மிக்க துறைகளில் ஒன்றான நீதித்துறையின் சுதந்திரம் அரசின் அண்மைய நடவடிக்கைகளால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை கண்டிக்கப்பட வேண்டியது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையின் கீழ் இயங்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிதிப் பரிமாற்றங்களைக் கொண்டுவரும் சட்டத்தை நிறைவேற்றக் காலம் தாழ்த்தியமை, மாகாண சபைகளின் அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக்கொள்ள முயன்றதை எதிர்த்தமை என்பன பிரதம நீதியரசர் செய்த குற்றங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேபோன்று மேலும் குற்றங்களை முன்னிறுத்தி பிரதம நீதியரசரை பதவி நீக்க எடுத்திருக்கும் முயற்சிகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## அரசுக்கு எதிராக...

13-வது திருத்தத்தை ஒழிக்கக்கூடாது என்று அரசாங்கத்தை கோரும் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற மாகாண முதல்வர்களும், உறுப்பினர்களும் முடிவு செய்துள்ளனர்.

இந்தத் தீர்மானம் வட மேல் மாகாண சபையினால் தயாரிக்கப்பட்டு, அதில் மாகாண முதல்வர் அதுல விஜேசிங்கவும் ஏனைய மாகாண சபை உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்னர்.

இந்த தீர்மானம் மீதான விவாதத்தை நடத்துவதற்கு வடமேல் மாகாண சபையின் சிறப்புக் கூட்டம் வரும் டிசம்பர் 3-ம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தத் தீர்மானம் ஏனைய மாகாண சபைகளிலும் கொண்டு வந்து நிறைவேற்றப் படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, பெரும்பாலான மாகாண முதல்வர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் விருப்பம் கொண்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

கார் வாடகைக்கு தேவை
வட மாகாணத்தில் இயங்கும் தனியார் கம்பனியின் முகாமையாளரின் பாவனைக்காக மாத வாடகைக்கு கார் தேவை.
மேலதிக விபரங்களுக்கு:
0725931515
(1038)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org